சுருக்கமாகச் சொல்லுவோமானால், நாம் எவ்வளவாக வேதாகம ஒழுங்கு மாதிரிகளைப் பின்பற்றுகிறோமோ, அவ்வளவாகச் சீஷர்களை உருவாக்கும் தேவன் கொடுத்திருக்கும் இலக்கை எட்டுவதில் அதிக ஆற்றலோடு செயல்பட முடியும். வேதாகம அடிப்படையில்லாத வடிவமைப்புகளும், செயல்பாடுகளுமே நவீன காலச் சபைகளில் சீஷராக்குதலுக்கு மிகப் பெரிய தடைகளாக இருக்கின்றன.



# 4

# வீட்டுச் சபைகள்

வீட்டுச் சபைகளைக் குறித்து மக்கள் முதன்முதலாகக் கேள்விப் படும்போது, வீட்டுச் சபைகளுக்கும் பிற சபைகளுக்கும் இடையிலுள்ள ஒரே வேறுபாடு அவைகளின் அளவிலும், ''ஊழியத்தைச்'' செய்யும் திறனிலும் உள்ள வேறுபாடு மட்டுமே என்று நினைத்துக்கொள்ளுகிறார்கள். கட்டிடங்களைக் கொண்ட சபை களிலுள்ள ஊழியத்தின் தரத்தை வீட்டுச் சபைகளினால் கொடுக்க முடியாது என்ற முடிவுக்கு மக்கள் வருகிறார்கள். ஆனால் ''ஊழியம்'' என்றால் சீஷர்களை உருவாக்குதல், அவர்கள் கிறிஸ்துவைப் போலாகு வதற்கு உதவிசெய்து, ஊழியத்துக்காக ஆயத்தப்படுத்துதல் என்ற விளக்கத்தைக் கொடுக்கும்போது, அமைப்புரீதியான சபைகள் எந்தச் சிலாக்கியத்தையும் பெற்றிருக்கவில்லை. ஏற்கெனவே நான் முந்தைய அத்தியாயத்தில் குறிப்பிட்டபடி, அவை சாதகமில்லாதவையாகவே காணப்படுகின்றன. வீட்டுச் சபைகளால் அமைப்புரீதியான சபைகளைப் போல *அதிக அளவிலான* பல்வேறு *நடவடிக்கைகளில்* ஈடுபட முடியாது என்பது உண்மைதான், ஆனால் *மெய்யான* ஊழியத்தைக் கொடுப்பதில் அவையே சிறப்பாகச் செயல்படுகின்றன.

வீட்டுச் சபைகளுக்குச் சபைக் கட்டிடங்கள் இல்லாதபடியால் அவை உண்மையில் சபைகள் அல்ல என்று சிலர் புறக்கணிக்கிறார்கள். இவர்கள் சபை வரலாற்றின் முதல் முந்நூறு ஆண்டு காலகட்டத்தில் வாழ்ந்திருப்பார்களானால், உலகத்திலுள்ள ஒவ்வொரு சபையும் உண்மையில் சபை அல்ல என்று புறக்கணித்திருப்பார்கள். உண்மை என்னவென்றால் இயேசுவானவர் ''இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் '' என்று சொல்லியிருக்கிறார் [மத். 18:20]. விசுவாசிகள் *எங்கே* கூடிவர வேண்டும் என்பதைக் குறித்து இயேசு ஒன்றும் சொல்லவில்லை. இரண்டே விசுவாசிகள் இருந்தாலும், அவர்கள் தமது நாமத்தினாலே கூடிவந்தால், அவர்கள் நடுவே தாம் இருப்பதாக

அவர் வாக்குத்தத்தம் அருளியிருக்கிறார். கிறிஸ்துவின் சீஷர்கள் உணவு விடுதியில் உணவைப் பகிர்ந்துகொண்டு, சத்தியத்தைப் பரிமாறிக் கொண்டு, ஒருவர் மற்றவரைக் கண்டித்து உணர்த்தும்போது, அவர்கள் ஞாயிற்றுக்கிழமை காலையில் பல சபைக் கட்டிடங்களில் நடப்பதை விடச் சபை கூடிவருதல்குறித்த புதிய ஏற்பாட்டு மாதிரிக்கு மெய்யாகவே நெருக்கமாக இருக்கிறார்கள்.

முந்தைய அத்தியாயத்தில், அமைப்புரீதியான சபைகளைவிட வீட்டுச் சபைகள் கூடுதலான சிலாக்கியங்களைப் பெற்றிருக்கின்றன என்று சுட்டிக்காட்டியிருந்தேன். இந்த அத்தியாயத்தில் வீட்டுச் சபை எப்படி அதிக மதிப்புள்ள வேதாகமரீதியான மாற்றாக இருக்கிறது என்பதைக் குறித்தும், சீஷராக்குதல் என்ற இலக்கை நிறைவேற்றுவதில் அது எப்படி ஆற்றலோடு செயல்படுகிறது என்பதைக் குறித்தும் உங்களோடு பகிர்ந்துகொள்ளப் போகிறேன். முதலாவதாக, அமைப்பு ரீதியான சபைகளையோ அல்லது அவைகளின் போதகர்களையோ தாக்குவது எனது நோக்கமல்ல என்பதைத் தெளிவுபடுத்துகிறேன். அமைப்புரீதியான சபைகளிலும் எண்ணற்ற பயபக்தியும் உண்மையுமுள்ள போதகர்கள் இருக்கிறார்கள், அவர்கள் தங்கள் வடிவமைப்புகளுக்குள்ளாக ஆண்டவரைப் பிரியப்படுத்த முயலுகிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் நான் ஆயிரக்கணக்கான அமைப்புரீதியான போதகர்களுக்கு ஊழியம் செய்கிறேன். நான் அவர்களை நேசிக்கிறேன், அதிகமாகப் பாராட்டுகிறேன். அவர்கள் உலகத்திலேயே மிகவும் நேர்த்தியான மக்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய பணிகள் எப்படித் தவிர்க்கமுடியாத அளவு கடினமானதாக இருக்கிறது என்பதை நான் அறிந்திருக்கிறபடி யால், இழப்புகளைக் குறைத்து, அதிக ஆற்றலோடும் மகிழ்ச்சியோடும் செயல்படக் கூடிய ஒரு மாற்றைக் கொடுக்க விரும்புகிறேன். வீட்டுச் சபை மாதிரி வேதாகமரீதியானதாகும்; சீஷர்களை உருவாக்குவதற்கும், தேவனுடைய ராஜ்யத்தின் விரிவாக்கத்துக்கும் அது ஆற்றலோடு செயல்படுகிறது. அமைப்புரீதியான போதகர்களில் பெரும்பாலானவர்கள் ஒரு வீட்டுச் சபையின் பின்னணியில் ஊழியம் செய்வார்களானால் அவர்கள் அதிகமான சந்தோஷத்தையும் நிறைவையும் பெறுவார்கள், அதிகமாகச் சாதிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

நான் இருபது ஆண்டுகளுக்கு மேலாக அமைப்புச்சார்ந்த போதகராக இருந்திருக்கிறேன். நான் அறிந்தபடி அப்போது சிறப்பாகச் செயல்பட்டேன். ஆனால் பல மாதங்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை காலையிலும் பல சபைகளுக்குச் சென்று கவனித்தபோதுதான், ஒரு ‘‘சாமானியனாக’’ சபைக்குச் செல்லுவது என்பது எப்படியிருக்கும் என்பதை உணர்ந்துகொண்டேன். அது என் கண்களைத் திறந்தது. ஏன் அதிகமான மக்கள் சபைக்கு வருவதில் ஆர்வம் காட்டவில்லை என்பதை நான் உணர்ந்தேன். போதகரைத் தவிர மற்ற எல்லோரையும்போல எப்போது





ஆராதனை முடியும் என்ற எதிர்பார்ப்போடு நான் அங்கே உட்கார்ந்து கொண்டிருப்பேன். அதன் பிறகாவது நான் பங்கெடுக்கும் ஒருவனைப் போல மற்றவர்களோடு இடைபட முடியும். இத்தகைய அனுபவம்தான் இவைகளுக்குச் சரியான மாற்று எது என்பது குறித்து என்னைச் சிந்திக்க வைத்தது. வீட்டுச் சபை மாதிரியைக் குறித்து நான் ஆய்வுசெய்யத் துவங்கினேன். இப்போதும் உலகெங்கிலும் இலட்சக்கணக்கான வீட்டுச் சபைகள் இருக்கின்றன என்பதை அறிந்தபோது அது எனக்கு வியப்பைக் கொடுத்தது. வீட்டுச் சபைகள் அமைப்புச்சார்ந்த சபைகளைவிடக் கூடுதலான அநுகூலங்களைப் பெற்றிருக்கின்றன என்ற முடிவுக்கு நான் வந்தேன்.

இந்தப் புத்தகத்தை வாசிக்கும் பெரும்பாலான போதகர்கள் ஒரு வீட்டுச் சபையை அல்ல, அமைப்புச்சார்ந்த சபையையே கவனிக்கிறார் கள். நான் எழுதியிருப்பதில் பெரும்பாலான காரியங்களை ஏற்றுக் கொள்ளுவது துவக்கத்தில் அவர்களுக்குக் கடினமாக இருக்கும். புரட்சிகரமாகத் தோன்றும் என்பதை நான் அறிவேன். ஆனால் நான் கூறியிருப்பவைகளைக் குறித்துச் சிந்தித்துப் பார்க்கும்படி நான் அவர்களை வேண்டிக்கொள்ளுகிறேன். ஒரே நாளில் அவர்கள் எல்லா வற்றையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. போதகர்கள் மீதும் அவர்களுடைய சபைகளின்மீதும் நான் கொண்டுள்ள அன்பினால் தூண்டப்பட்டு இதை எழுதியிருக்கிறேன்.

### வேதாகமத்திலுள்ள ஒரே வகைப்பட்ட சபை

முதலாவதாக, புதிய ஏற்பாட்டுக் காலத்தில் சிறப்பான கட்டிடங் களில் கூடிவந்த அமைப்புச் சார்ந்த சபைகள் இல்லை. வீட்டுச் சபைகளே தெளிவான மாதிரிகளாக இருந்தன.

> அவன் இப்படி நிச்சயித்துக்கொண்டு, மாற்கு என்னும் பேர்கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் *வீட்டுக்கு* வந்தான்; அங்கே அநேகர் கூடி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்கள் [அப். 12:12 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

> பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்துவைக்காமல், *வெளியரங்கமாக வீடுகள்தோறும்* உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம் பண்ணி [அப். 20:20 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

> கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட் களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள் ...அவர்களுடைய *வீட்டிலே கூடிவருகிற சபையையும்* வாழ்த்துங்கள் [ரோமர் 16:3–5 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது; ரோமாபுரியிலிருந்த மேலும் இரண்டு

வீட்டுச் சபைகளைக் குறித்து ரோமர் 16:14–15 வசனங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதையும் கவனியுங்கள்).

ஆசியா நாட்டிலுள்ள சபையார் உங்களை வாழ்த்துகிறார்கள். ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் தங்கள் *வீட்டிலே கூடுகிற சபையோடுங்கூடக்* கர்த்தருக்குள் உங்களை மிகவும் வாழ்த்துகிறார்கள் (1 கொரி. 16:19 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

லவோதிக்கேயாவிலிருக்கிற சகோதரரையும், நிம்பாவையும், அவன் *வீட்டில் கூடுகிற சபையையும்* வாழ்த்துங்கள் (கொலோ. 4:15 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

பிரியமுள்ள அப்பியாளுக்கும், எங்கள் உடன் போர்ச்சேவகனாகிய அர்க்கிப்புவுக்கும், உம்முடைய *வீட்டிலே கூடிவருகிற சபைக்கும்* எழுதுகிறதாவது (பிலே. 1:2 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது).

சபையானது இன்னும் குழந்தைப் பருவத்தில் இருந்த படியினால்தான் சபைக் கட்டிடங்கள் கட்டப்படவில்லை என்று சிலர் விவாதிக்கிறார்கள். ஆனால் இந்தக் குழந்தைப் பருவம் பதிவுசெய்யப்பட்ட புதிய ஏற்பாட்டுச் செய்திகளில் நூறாண்டு காலமும், அதன் பிறகு இருநூறு ஆண்டுகாலமும் தொடர்ந்திருக்கிறது. எனவே சபைக் கட்டிடங்கள் கட்டப்படுவது சபையின் முதிர்ச்சியைக் குறிக்கும் என்றால், நடபடிகளின் புத்தகத்தில் நாம் பார்க்கும் அப்போஸ்தலர்கள் ஸ்தாபித்த சபைகள் முதிர்ச்சியடையவில்லை என்று ஆகிவிடுமே?

அப்போஸ்தலர்கள் எவரும் சபைக் கட்டிடங்களைக் கட்டாததற்கு அது தேவனுடைய சித்தத்துக்கு அப்பாற்பட்டது என்று அவர்கள் கருதியதே காரணமாகும். ஏனென்றால் இயேசுவானவர் இப்படிப்பட்ட முன்மாதிரியை விட்டுச் செல்லவில்லை, இதைக் குறித்துப் போதிக்கவுமில்லை. *சிறப்பான கட்டிடங்கள் இல்லாமல்* அவர் சீஷர்களை உருவாக்கினார்; சீஷர்களை உருவாக்கும்படி தமது சீஷர்களுக்குக் கட்டளையிட்டார். *சிறப்பான கட்டிடங்களுக்குரிய* எந்தத் தேவையையும் அவர்கள் காணவில்லை. உலகமெங்கும் போய் எல்லோரையும் சீஷராக்கும்படி இயேசு தமது சீஷர்களுக்குக் கட்டளையிட்டபோது, அவர்கள் ''நாம் கட்டிடங்களைக் கட்டி வாரம் ஒரு முறை மக்களுக்குப் பிரசங்கிக்க வேண்டும் என்றே இயேசு கூறுகிறார்'' என்று நினைக்கவில்லை.

மேலும், சபைக் கட்டிடங்களைக் கட்டுவது பூமியிலே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்காதிருங்கள் என்ற இயேசுவின் கட்டளையை





மீறுவதாக இருக்கும், முற்றிலும் தேவையில்லாத ஒன்றுக்காகப் பணத்தை விரயம்செய்வதாக இருக்கும், மனமாற்றமளிக்கும் ஊழியத்துக்காகப் பயன்படுத்தக் கூடிய ஆதாரங்களைத் தேவனுடைய ராஜ்யத்திலிருந்து கொள்ளையிடுவதாக அது இருக்கும்.

## வேதாகமரீதியான உக்கிராணத்துவம்

இது அமைப்புச்சார்ந்த சபைகளுக்கு மேலாக வீட்டுச் சபைகள் கொண்டிருக்கும் இரண்டாவது சிலாக்கியத்துக்கு நம்மை வழிநடத்துகிறது. வீட்டுச் சபை மாதிரி அதன் உறுப்பினர்களின் ஆதாரங்களைப் பயபக்தியோடு உக்கிராணத்துவம் செய்வதை ஊக்குவிக்கிறது. இது சீஷத்துவத்தின் மிகவும் முக்கியமான அம்சமாகும். எந்தப் பணமும் சபைக் கட்டிடங்களைக் கட்டவோ, வாங்கவோ, வாடகைக்கு எடுக்கவோ, பழுது பார்க்கவோ, விரிவாக்கவோ, மாற்றியமைக்கவோ, சூடுண்டாக்கவோ அல்லது குளிர்ச்சியுண்டாக்கவோ வீணாக்கப்படவில்லை. இதன் காரணமாக, கட்டிடங்களில் வீணாக்கப்படாமல் சேமிக்கப்பட்ட பணத்தைக் கொண்டு ஏழைகளுக்கு உணவையும், உடையையும் அளிக்க முடியும், சுவிசேஷத்தைப் பரவச் செய்யவும், சீஷர்களை உருவாக்கவும் செலவழிக்கப்பட முடியும். *நடபடிகளின் நூலில் நடந்ததுபோல* இவைகளை நம்மால் செய்ய முடியும். சபைக் கட்டிடங்களுக்காகச் செலவழிக்கப்படும் கோடிக்கணக்கான ரூபாய் பணம் சுவிசேஷத்தைப் பரவச் செய்வதற்கும், ஏழைகளுக்கு ஊழியம் செய்வதற்கும் பயன்படுத்தப்படுமானால், அது தேவனுடைய ராஜ்யத்துக்கு எத்தகைய பயன்களைக் கொண்டுவர முடியும் என்பதைக் குறித்து நினைத்துப் பாருங்கள். இதைக் கற்பனை செய்து பார்க்கவும் முடியாது!

மேலும், இருபது பேர்களுக்கு மேற்படாத வீட்டுச் சபைகளை ''கூடாரத் தொழிலின்'' மூலமாக (அதாவது, ஊதியம் பெறாத) மூப்பர்கள்/போதகர்கள்/கண்காணிகளால் கண்காணிக்கப்பட முடியும். ஒரு வீட்டுச் சபையில் அதிகமான முதிர்ச்சியடைந்த விசுவாசிகள் இருப்பார்களானால் இது சாத்தியமாகிறது. இப்படிப்பட்ட சபைகளைச் செயல்படுத்தக் கிட்டத்தட்ட எந்தப் பணமும் செலவழியாது.

அவர்களுடைய உழைப்புக்குத் தக்கபடி மூப்பர்கள்/போதகர்கள்/கண்காணிகளுக்கு ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று வேதாகமம் சொல்லுகிறது. இதனால் முழு நேர ஊழியத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் அந்தப் பணத்தைக் கொண்டு தங்கள் பிழைப்பை நடத்த முடிகிறது (பார்க்க, 1 தீமோ. 5:17–18). ஒரு வீட்டுச் சபையின் உறுப்பினர்களில் பத்துப் பேர் ஊதியம் பெறுவார்களானால், அவர்களுடைய தசமபாகத்தைக் கொண்டு சராசரியான வாழ்க்கை வசதியை ஒரு போதகருக்குக் கொடுக்க முடியும். தசமபாகம் கொடுக்கும் ஐந்து பேர் இருப்பார்களா

னால், வாரத்தின் பாதி நாட்களில் போதகர் தனது சொந்த வேலையைச் செய்துவிட்டு, மீதி நாட்களில் சபையைக் கவனிக்க முடியும்.

வீட்டுச் சபை மாதிரியைப் பின்பற்றும்போது, சபைக் கட்டிடங்களுக்காகச் செலவழிக்கப்படும் பணம் போதகர்களுக்கு ஆதரவளிக்கும்படி விடுவிக்கப்படுகிறபடியால் அவர்கள் தங்கள் வேலைப் பாதுகாப்பு குறித்து எந்தவித அச்சமும் கொள்ளத் தேவையில்லை. மேலும் பல ஆண்களும், பெண்களும் தேவன் தங்களுடைய இருதயத்தில் கொடுத்திருக்கும் ஊழிய வாஞ்சைக்கு ஏற்ப முழு நேர ஊழியத்தில் ஈடுபட முடியும்.[13] இது சீஷர்களை உருவாக்கும் இலக்கை எட்டுவதற்கு உதவியாக இருக்கும். மேலும், ஒரு வீட்டுச் சபையில் சம்பாதிக்கக் கூடிய இருபது பேர் இருப்பார்களானால் சபையானது தனது வருமானத்தில் ஒரு பகுதியை வெளி ஊழியத்துக்கும் ஏழைகளுக்கும் கொடுக்க முடியும்.[14]

ஒரு அமைப்புச்சார்ந்த சபையானது பல வீட்டுசபைகளாக மாற்றம் பெறுமானால், சபை நிர்வாகத்தோடும், செயல்திட்டங்களோடும் தொடர்புடைய அலுவலர்களும் சிறப்பு ஊழியங்களின் (எடுத்துக்காட்டாக, பெரிய சபைகளில் சிறுவர் மற்றும் இளைஞர் ஊழியங்கள்) அலுவலர்களும் வேதாகமரீதியான ஊழியத்துக்குத் தங்களை மாற்றிக் கொள்ளாவிட்டால், தங்கள் வேலைகளை இழந்துவிட நேரிடும். வீட்டுச் சபைக்குச் சிறுவர் மற்றும் இளைஞர் ஊழியர்கள் தேவையில்லை, ஏனென்றால் பெற்றோருக்கே அந்தப் பொறுப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. வீட்டுச்சபைகளைச் சேர்ந்தவர்கள் கலாச்சாரக் கிறிஸ்தவத்தின் அம்சங்களைப் பின்பற்றுவதற்கு மாறாக வேதாகமரீதியான அம்சங்களைப் பின்பற்றுவதையே நாடுகிறார்கள். கிறிஸ்தவப் பெற்றோரைக்

[13] இது புரட்சிகரமாகத் தோன்றினாலும், சிறிய வீட்டுச் சபைகளைக்கண்காணிக்கக்கூடிய போதகர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிறபடியினால்தான் சபைக்கட்டிடங்களுக்கான தேவை அதிகமாகிறது. இதன் காரணமாக அமைப்புச் சார்ந்த சபைகளில் தலைவர்களாக ஆகக்கூடியவர்களுக்குச் சீஷத்துவப்பயிற்சி கொடுக்கும் வாய்ப்பு குறைகிறது. பெரிய அமைப்புச்சார்ந்த சபையின் போதகர்கள் தங்கள் சபையில் தேவனுடைய அழைப்பைப் பெற்றிருக்கிறவர்கள் ஊழியம் செய்வதற்கான வாய்ப்பைக் கொடுக்காமல் அவர்களுடைய திறமைகளைக் கொள்ளையடிக்கும் குற்றத்தைச் செய்கிறார்கள் என்றுதான் எண்ண வேண்டியிருக்கிறது.

[14] ஒருவருக்குப் பத்துப் பேர் அல்லது இருபது பேர் என்ற அளவினால், போதகர்கள் கடுமையாக உழைத்துச் சோர்வடைய வேண்டியிருக்கும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் வேதாகம முன்மாதிரியின்படி இயேசுவானவர் பன்னிருவரைச் சீஷராக்கினார், மோசே பத்துப் பேருக்குப் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொடுத்தார் (பார்க்க, யாத். 18:25). பல அமைப்புச் சார்ந்த போதகர்கள் தாங்களாகவே சீஷராக்கக்கூடிய மக்களின் எண்ணிக்கைக்கும் அதிகமான பேர்களைக் கண்காணிக்க வேண்டியிருக்கிறது.





கொண்டிராத இளைஞர்களை அமைப்புச்சார்ந்த சபைகளில் சேர்த்துக் கொள்ளுவதுபோலவே வீட்டுச் சபைகளிலும் சேர்த்துக்கொண்டு அவர்களைச் சீஷராக்கலாம். ஏன் புதிய ஏற்பாட்டில் ''இளைஞருக்கான போதகர்களைக்'' குறித்தோ அல்லது ''சிறுவர்களுக்கான போதகர்களைக்'' குறித்தோ குறிப்பிடப்படவில்லை என்று எவராவது வியப்படைகிறீர்களா? கிறிஸ்தவ சமயத்தின் முதல் 1900 ஆண்டுகளுக்கு இப்படிப்பட்ட தனிப்பட்ட ஊழியங்கள் இருக்கவில்லை. இப்போது மட்டும் ஏன் அவை அத்தியாவசியமாக, குறிப்பாகச் செல்வம் நிறைந்த மேற்கத்திய நாடுகளில் அத்தியாவசியமானவையாக இருக்கின்றன? [15]

இறுதியாக, ஏழை நாடுகளில் போதகர்களால் மேற்கத்திய நாட்டுக் கிறிஸ்தவர்களின் உதவியில்லாமல் சபைக் கட்டிடங்களை வாடகைக்கு எடுக்கவோ அல்லது கட்டவோ முடியாதிருக்கிறது. இப்படிப்பட்ட சார்புநிலை பல மோசமான பின்விளைவுகளைக் கொண்டுவருகிறது. ஆனால் முதல் 300 ஆண்டுகளுக்குக் கிறிஸ்தவ சமயத்தில் இந்தப் பிரச்சினை எழவேயில்லை. நீங்கள் சொந்தச் சபைக்கட்டிடம் இல்லாத ஒரு வளர்ந்துவரும் நாட்டிலுள்ள சபையின் போதகராக இருப்பீர்களானால், இப்போது செய்வதுபோலச் சபைக்கு வருகைதரும் ஒரு அமெரிக்கரிடமிருந்து உதவிபெறும் நோக்கத்தோடு அவரை வானளாவப் புகழ வேண்டிய அவசியமில்லை. தேவன் ஏற்கெனவே உங்கள் பிரச்சினைக்குத் தீர்வைக் கொடுத்திருக்கிறார். சீஷர்களை உருவாக்குவதில் வெற்றிகரமாக ஈடுபடுவதற்கு உங்களுக்கு ஒரு சபைக் கட்டிடம் தேவையில்லை. வேதாகம முன்மாதிரியைப் பின்பற்றுங்கள்.

## துண்டுபட்ட குடும்பங்களுக்கு முடிவு

வீட்டுச் சபைகளின் மற்றொரு அநுகூலம் அவை சிறுவர்களையும், இளைஞர்களையும் சீஷராக்குவதில் மிகச் சிறப்பாகச் செயல்படுகின்றன என்பதாகும். இன்று பெரிய அமைப்புச் சார்ந்த சபைகள் சொல்லும் பொய்யான காரியம் என்னவென்றால் (குறிப்பாக அமெரிக்காவிலுள்ள பெரிய சபைகள்) தாங்கள் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் அற்புதமாக ஊழியம் செய்கிறோம் என்று அவை உரிமை கொண்டாடுவதாகும். ஆனால் பல ஆண்டுகள் சிறுவர் ஊழியத்திலும் பிறகு இளைஞர் ஊழியத்திலும் பராமரிக்கப்பட்ட பிள்ளைகளில் பெரும்

[15] ஏன் வேதாகமத்தில் ''தலைமைப் போதகர்கள்'', ''துணைப் போதகர்கள்'', ''உதவிப் போதகர்கள்'' இவர்களைக் குறித்துக் குறிப்பிடப்படவில்லை என்றுகூட நாம் வியப்படையலாம். நவீன சபைகளின் வடிவமைப்பின் காரணமாக அத்தியாவசியமாகக் காணப்படும் இந்தப் பதவிகள், துவக்ககாலச் சபையின் வடிவமைப்பின் காரணமாக அத்தியாவசியமானவையாகக் காணப்படவில்லை. இருபது பேரைக் கொண்ட வீட்டுச் சபைகளுக்கு தலைமை, துணை, உதவிப் போதகர்கள் தேவைப்படுவதில்லை.

பாலானவர்கள் ‘‘கூட்டுக்குத் திரும்புவதில்லை’’ என்ற உண்மையை மறைத்துவிடுகிறார்கள் [புள்ளிவிவரங்களை அறிய எந்த இளைஞர் ஊழியப் போதகரையும் கேளுங்கள் – அவர் அவைகளை அறிந்தருப்பார்].

மேலும், இளைஞருக்கான மற்றும் சிறுவருக்கான போதகர்களைக் கொண்டிருக்கும் சபைகள் பெற்றோர்களிடம் அவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு ஆவிக்குரிய பயிற்சிகொடுக்கத் திறமையில்லாதவர்கள் அல்லது அந்தப் பொறுப்பு அவர்களுக்கு இல்லை என்ற பொய்யான தகவலைப் பரப்பிக்கொண்டிருக்கிறார்கள். ‘‘உங்கள் பிள்ளையின் ஆவிக்குரிய பயிற்சியை நாங்கள் கவனித்துக்கொள்ளுவோம். நாங்கள் இதற்காகத் தொழில்ரீதியாகப் பயிற்சி பெற்றிருக்கிறோம்’’ என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

இந்த ஒழுங்குமுறை தோல்வியையே பிறப்பிக்கிறது, ஏனென்றால் இன்னுமதிகமதிகமாக விட்டுக்கொடுக்க வேண்டிய சுழற்சியை அது உருவாக்குகிறது. தங்கள் பிள்ளைகள் சந்தோஷமான அனுபவத்தைப் பெறக் கூடிய சபைகளைத் தேடும் பெற்றோரிலிருந்து அது துவங்குகிறது. வீட்டுக்குக் காரில் திரும்பும்போது ஜானி சபையில் தனக்குச் சந்தோஷமாக இருந்தது என்று சொல்லுவான் என்றால் பெற்றோர் கிளர்ச்சியடைகிறார்கள். ஏனென்றால் ஜானி சபையில் சந்தோஷப்படுவதையும், அவன் ஆவிக்குரிய காரியங்களில் வளர்ச்சியடைவதையும் அவர்கள் ஒன்றுபடுத்திப் பார்க்கிறார்கள். பெரும்பாலும் அவர்களுடைய எண்ணம் மிகவும் தவறாகவே இருக்கிறது.

வெற்றிபெற வேண்டும் என்ற உந்துதலைக் கொண்ட தலைமைப் போதகர்கள் தங்கள் சபை வளர்ச்சியடைய வேண்டுமென்று விரும்புகிறார்கள். நிர்வாகக் கூட்டங்களில் பங்கெடுக்கும் சிறுவருக்கான போதகர்களும் இளைஞருக்கான போதகர்களும் பிள்ளைகள் வேடிக்கையாக இருக்கிறது என்று நினைக்கக்கூடிய ‘‘பொருத்தமான’’ செயல் திட்டங்களை உருவாக்க வேண்டும் என்ற அழுத்தத்தோடு வெளியே வருகிறார்கள். [‘‘பொருத்தமானது’’ என்பது எப்போதுமே ‘‘வேடிக்கையானது’’ என்பதற்கு அடுத்தபடியாகவே இருக்கிறது. ‘‘பொருத்தமானது’’ என்றால் ‘‘பிள்ளைகளை மனந்திரும்பி, இயேசுவை விசுவாசித்து, அவருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்படி வழிநடத்துவது’’ என்பதாக இருக்க வேண்டிய அவசியமில்லைஎன்று நினைக்கப்படுகிறது]. பிள்ளைகள் இந்தச் செயல்திட்டங்களை ஏற்றுக்கொள்ளுவார்களானால், சூதறியாத பெற்றோர் [தங்கள் பணத்தோடு] சபைக்குத் திரும்பி வருவார்கள். சபை வளர்ச்சியடையும்.

இளைஞர் குழுக்களின் வெற்றி, குறிப்பாக எத்தனை பேர் வருகை தருகிறார்கள் என்பதைக் கொண்டு அளக்கப்படுகிறது. இளைஞருக்கான போதகர்கள் அவர்களை உள்ளே வரும்படி செய்வதற்காகப் பல





காரியங்களையும், சில வேளைகளில் மெய்யான ஆவிக்குரிய தன்மையையும் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கிறது. பாவம் அந்த இளைஞருக்கான போதகர்! தங்கள் பிள்ளைகள் சோர்வளிக்கும் அல்லது குற்றம் சாட்டும் செய்திகளை இளைஞர் போதகர் கொடுப்பதாகக் குறை கூறுகிறார்கள் என்று பிள்ளைகளின் பெற்றோர் தலைமைப் போதகரிடம் முறையிட்டிருக்கிறார்கள்!

ஆனால் இந்த இளைஞருக்கான போதகர்கள் வீட்டுச் சபைகளின் தலைவர்களாக ஆனால் அது கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு எப்படிப்பட்ட ஆசீர்வாதமாக இருக்கும்! அவர்கள் இயல்பாகவே தொடர்பு கொள்ளும் திறன்களையும், இளைஞருக்கேயுரிய ஆர்வத்தையும் சக்தியையும் கொண்டிருக்கிறார்கள். பலருக்கு அது பிற்காலத்தில் தலைமைப் போதராகப் பிழைத்திருப்பதற்குத் தேவையான மானிட சக்திக்கு அப்பாற்பட்ட திறன்களைப் பெறுவதற்கு முதல்படியாக இருக்கிறபடியால் இளைஞருக்கான போதகர்களாக இருக்கிறார்கள். இவர்களில் பலர் ஒரு வீட்டுச் சபையைக் கண்காணிப்பதற்குக் கூடுதலான தகுதிகளையே பெற்றிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் இளைஞர் குழுக்களில் செய்துவரும் ஊழியம் அந்தச் சபையில் பொதுவாக நடத்தப்படும் ஊழியத்தைவிடப் புதிய ஏற்பாட்டு மாதிரிக்குக் கூடுதலான நெருக்கமாக இருக்கிறது. சிறுவருக்கான போதகர்களைக் குறித்தும் இப்படிச் சொல்ல முடியும். அவர்களால் பல தலைமைப் போதகர்களைவிட வீட்டுச் சூழ்நிலையில் இன்னும் சிறப்பாக ஊழியம் செய்ய முடியும். வீட்டுச் சபையில் சிறுபிள்ளைகள் உட்பட எல்லோரும் ஒரு சிறிய வட்டமாக அமர்ந்து, உணவை அனுபவிப்பதோடுகூட ஒருவர் மற்றவரின் ஆவிக்குரிய உறவையும் அனுபவிக்கிறார்கள்.

சிறுபிள்ளைகளும், இளைஞர்களும் *இயல்பாகவே* ஒரு வீட்டுச் சபையில் இன்னும் சிறப்பாகச் சீஷத்துவப் பயிற்சிபெற முடியும். ஏனென்றால் அவர்களால் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தின் அங்கமாக மெய்யான கிறிஸ்தவ சமுதாயத்தின் உறவை அனுபவிக்க முடியும், பங்கெடுக்கவும், கேள்விகளைக் கேட்கவும், மற்ற வயதினரோடு உறவுகொள்ளவும் அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கிறது. அமைப்புச் சார்ந்த சபைகளில் அவர்கள் தொடர்ந்து ‘‘வேடிக்கையாக’’ இருக்கும் காரியங்களையே கவனிக்க வேண்டியிருக்கிறது, சமுதாயத்தோடு உறவுகொள்ள அவர்களுக்கு வாய்ப்புக் கிடைப்பதில்லை. பெரும்பாலும் மாய்மாலமான நடத்தைகளையே அவர்கள் கவனிக்க வேண்டியிருக்கிறது. பள்ளியில் நடப்பதுபோலவே அங்கேயும் சமவயதினரோடு பழகுவதை மட்டுமே அவர்கள் கற்றுக்கொள்ளுகிறார்கள்.

ஆனால் எல்லா வயதினரும் கூடியிருக்கும் வேளையில் சிறு குழந்தைகள் அழுவார்கள், சிறு பிள்ளைகள் பொறுமையிழந்து தவிப்பார்கள். அப்போது என்ன?

சிறு குழந்தைகளை ஒருபோதும் தொந்திரவாகக் கருதக் கூடாது, பிரச்சினைகள் எழுமானால் அவைகளைச் செயல்பூர்வமாகச் சமாளிக்கும் வழிவகைகளை உண்டாக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, அவர்களை மற்றொரு அறைக்கு அழைத்துச் சென்று படம் வரைவதற்கான கலர் பென்சில்கள் காகிதங்கள் இவைகளைக் கொடுக்கலாம். ஒரு வீட்டுச் சபையில் குழந்தைகளும் பிள்ளைகளும் பிரச்சினைகளாக இருப்ப தில்லை. அவர்களை அதற்காக அந்நியர் நடத்தும் நர்சரியில் விட்டுவர வேண்டியதில்லை. இந்த விரிவாக்கப்பட்ட குடும்பத்தில் எல்லோரும் அவர்களை நேசிக்கிறார்கள். ஒரு அமைப்புச் சார்ந்த சபையில் அழத் துவங்கும் குழந்தை அதன் ஒழுங்குக்கு இடையூறாக இருப்பதாகக் கருதப்படுகிறது. அது பெற்றோரைத் திக்குமுக்காடச் செய்கிறது, முன்பு ஒருபோதும் அறிமுகமாகாதவர்கள்கூட அவர்களை முறைத்துப் பார்க்கிறார்கள். ஒரு வீட்டுச் சபையில் ஒரு குழந்தை அழும்போது, அதைச் சுற்றிலும் அதன் குடும்பத்தினர் இருக்கிறார்கள். தேவனிட மிருந்து வந்திருக்கும் ஒரு சிறிய ஈவு தங்கள் மத்தியில் இருப்பதாக நினைவூட்டப்படும்போது எவரும் அதைக் குறித்துக் கோபப்படு வதில்லை. ஏனென்றால் எல்லோருமே அந்தக் குழந்தையைக் கையில் எடுத்துக் கொஞ்சியிருக்கிறார்கள்.

கட்டுப்படுத்த முடியாத பிள்ளைகளைக் கொண்டிருக்கும் பெற்றோருக்கு அனுபவம் வாய்ந்த மற்ற பெற்றோர்கள் ஆலோசனை கூறலாம். விசுவாசிகள் மெய்யானதும் அக்கறைகாட்டுவதுமான உறவு களைப் பெற்றிருக்கிறார்கள். அமைப்புச் சபையில் அடிக்கடி நடப்பது போல அவர்கள் ஒருவர் மற்றவரைக் குறித்துப் புறம்பேசவில்லை. அவர்கள் ஒருவரையொருவர் அறிந்து, ஒருவரையொருவர் நேசிக் கிறார்கள்.

### சந்தோஷமான போதகர்கள்

இருபது ஆண்டுகளுக்கு மேலாக நான் சபைகளுக்குப் போதகராக இருந்திருக்கிறேன், உலகெங்கிலும் பல்லாயிரக்கணக்கான போதகர் களோடு பேசியிருக்கிறேன், பல போதகர்கள் எனக்குத் தனிப்பட்ட நண்பர்களாக இருக்கிறார்கள். ஒரு நவீன சபையைக் கண்காணிப்பதில் எதிர்பார்க்கப்படுபவை குறித்து என்னால் சொல்ல முடியும் என்றே நினைக்கிறேன். அமைப்புச்சார்ந்த சபையிலுள்ள ஒவ்வொரு போதகரை யும்போல நான் ஊழியத்தின் ''இருண்டபக்கத்தை'' அனுபவித்திருக் கிறேன். சில வேளைகளில் அது அதிகமாக இருண்டு போயிருக்கிறது. உண்மையில், ''முரட்டுத்தனமான'' என்றுதான் கூற வேண்டும்.

பெரும்பாலான போதகர்கள் எதிர்கொள்ள வேண்டிய எதிர்பார்ப்பு கள் இயல்பாகவே அவர்களுடைய குடும்பத்தோடு கொண்டிருக்கும் உறவில் நெருக்கத்தை உண்டுபண்ணுகிறது, சில வேளைகளில் இந்த உறவைப் பாழ்படுத்திவிடுகிறது. பல காரணங்களுக்காகப் போதகர்கள்





ஊக்கமிழந்து போகிறார்கள். அவர்கள் அரசியல்வாதிகளாகவும், நீதிபதி களாகவும், முதலாளிகளாகவும், மனநோய் மருத்துவர்களாகவும், செயல் நடவடிக்கை இயக்குநர்களாகவும், கட்டிட ஒப்பந்தக்காரர்களாகவும், திருமண ஆலோசகர்களாகவும், மேசைப் பேச்சாளர்களாகவும், மேலாளர் களாகவும், சிந்தையிலிருப்பதை அறிபவர்களாகவும், நிர்வாகிகளாகவும் இருக்க வேண்டியிருக்கிறது. கிறிஸ்துவின் சரீரத்தில் பெரிய துண்டைப் பெறுவதற்காக அவர்கள் அடிக்கடி மற்றப் போதகர்களோடு போட்டிபோட வேண்டியிருக்கிறது. தனிப்பட்ட ஆவிக்குரிய ஒழுங்கு களுக்காக அவர்களுக்குப் போதிய நேரம் கிடைப்பதில்லை. பலர் தங்கள் வேலையில் தாங்கள் சிக்கிக்கொண்டிருப்பதாகவும், குறைவான சம்பளத்தைப் பெறுவதாகவும் நினைக்கிறார்கள். அவர்களுடைய சபை ஒரே வேளையில் அவர்களுடைய வாடிக்கையாளராகவும், முதலாளி யாகவும் இருக்கிறது. சில வேளைகளில் இந்த வாடிக்கையாளர்களும், முதலாளிகளும் அவர்களுடைய வாழ்க்கையை நரகமாக்கிவிடுகிறார் கள்.

இதோடு ஒப்பிடும்போது, வீட்டுச் சபைப் போதகருக்கு எல்லாம் எளிதாக இருக்கிறது. முதலாவதாக, அவர் மெய்யான சீஷன் மற்றும் போதகரின் முன்மாதிரியான வாழ்க்கை வாழ்ந்து, இயேசுவின் கட்டளை களுக்குக் கீழ்ப்படிவதில் விட்டுக்கொடுக்காதவராக இருப்பாரானால், அவருடைய குழுவில் உறுப்பினராக இருக்க வெள்ளாடுகள் விரும்ப மாட்டா. ஒரு வீட்டில் கூடிவருவதே பல வெள்ளாடுகளைத் தொலை வில் விரட்டிவிடும். எனவே அவர் பெரும்பாலும் செம்மறியாடுகளுக்கே ஊழியம் செய்ய வேண்டியிருக்கும்.

இரண்டாவதாக, அவர் தன்னுடைய செம்மறியாடுகள் எல்லா வற்றையும் தனிப்பட்ட முறையில் சீஷராக்க முடியும். ஏனென்றால் அவர் பன்னிரண்டு முதல் இருபது பெரியவர்களை மட்டுமே கண் காணிக்க வேண்டியிருக்கிறது. அவர் ஒரு குடும்பத்தின் தகப்பனைப் போல இருக்கிறபடியால், அவர்களோடு மெய்யான நெருக்கத்தை அனுபவிக்க முடியும். அவர்களுக்குத் தகுதியான நேரத்தை அவரால் கொடுக்க முடியும். நான் ஒரு அமைப்புச் சார்ந்த போதகராக இருந்தபோது, அடிக்கடி தனிமை உணர்வில் தவித்திருக்கிறேன். மற்றவர்கள் நான் அவர்களை என் நெருங்கிய நண்பர்கள் வட்டத்துக்குள் வைத்திருக்கவில்லை என்று நினைத்துக்கொள்ளக் கூடாது என்பதற்காகவும், அவர்கள் வட்டத்துக்குள் இருப்பவர்களைக் குறித்துப் பொறாமைப்படக் கூடாது என்பதற்காகவும் எனது சபையில் எவரோடும் என்னால் நெருக்கமாகப் பழக முடியவில்லை. மற்ற விசுவாசிகளோடு மெய்யான நெருக்கத்துக்காக நான் வாஞ்சித்தேன். ஆனால் நண்பர் களைப் பெறுவதற்காக நான் கொடுக்க வேண்டிய கிரயத்தை எண்ணித் துணிந்து செயல்படவில்லை.

ஒரு வீட்டுச் சபையின் நெருக்கமான உறவில் உறுப்பினர்கள் இயல்பாகவே போதகரைக் கணக்குக்கொடுக்கும் ஒருவராக ஆக்குகிறார்கள். அவர் மேடையில் நடிக்கும் ஒரு நடிகனாக அல்ல, அவர்களுடைய நெருங்கிய நண்பனாக இருக்கிறார்.

வீட்டுச் சபைப் போதகரால் வருங்கால வீட்டுச் சபைகளுக்குத் தேவையான தலைவர்களை உருவாக்குவதில் நேரத்தைச் செலவிட முடியும். எனவே பெருக்கமடையும் வேளை வரும்போது தலைவர்கள் ஆயத்தமாக இருக்கிறார்கள். வருங்காலத்தில் தலைவர்களாகக் கூடியவர்கள் சபையிலிருந்து உதவியைப் பெற்று, வேறொரு இடத்தில் வேதாகமப் பள்ளியில் சேருவதை அவர் கவனித்துக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

தனது உள்ளூர் சபைக்கு வெளியே மற்ற ஊழியங்களை வளரச் செய்யவும் அவருக்கு நேரம் இருக்கும். ஒருவேளை அவர் சிறைச்சாலையிலோ அல்லது காப்பகங்களிலோ ஊழியம் செய்யலாம். அகதிகளுடனோ அல்லது தொழிலதிபர்களுடனோ ஒருவருக்கு–ஒருவர் ஊழியத்தில் ஈடுபடலாம். அவருடைய அனுபவத்தைப் பொருத்து, புதிய வீட்டுச் சபைகளை ஸ்தாபிப்பதிலோ அல்லது தனது ஊழியத்தின் கீழாக உருவாகிய மற்ற வீட்டுச் சபைகளின் போதகர்களுக்கு அறிவுரை கூறுவதிலோ நேரத்தைச் செலவழிக்க முடியும்.

ஞாயிறு காலைச் சாதனையாளராக இருக்க வேண்டும் என்ற அழுத்தம் அவருக்குக் கிடையாது. சனிக்கிழமை மாலையில் மூன்று குறிப்புகளைக் கொண்ட ஒரு பிரசங்கத்தை அவர் தயாரிக்க வேண்டியிருக்கவில்லை. வெவ்வேறான ஆவிக்குரிய வளர்ச்சியின் மட்டத்திலிருக்கும் மக்களைத் தன்னால் எப்படி ஒரே வேளையில் திருப்திப்படுத்த முடியும் என்று எண்ணிக் கவலைப்பட வேண்டியதில்லை.[16] கூடிவரும் எல்லோரையும் பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்துவதை அவர் சந்தோஷத்தோடு பார்த்துக்கொண்டிருக்க முடியும், ஒவ்வொரு

[16] பல போதகர்கள் தேவனால் அழைக்கப்பட்டு, கரிசனையுள்ள கிறிஸ்துவின் சேவகர்களாக இருந்தாலும், சிறந்த பேச்சாளர்களாக ஆவதில்லை. உண்மையில் போதகர்களின் பல பிரசங்கங்கள் சோர்வளிக்கின்றன அல்லது பிரசங்கங்களின் பகுதிகள் சோர்வளிக்கின்றன என்று கூறுவது கடுமையான காரியமாக இராது அல்லவா?சபையார் வெறுமனே வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பேசும்போது சோர்வளிக்கும் பல போதகர்கள் உரையாடலில் வல்லவர்களாக இருக்கிறார்கள், அப்போது அவர்கள் சோர்வளிப்பதில்லை. எனவேதான் வீட்டுச் சபைகளில் எல்லோரும் பங்கெடுக்கும் போதனை வேளை ஆர்வத்தைத் தூண்டுவதாக இருக்கிறது. சபைப் பிரசங்க வேளைகளில் மற்றவர்கள் கவனியாதபடி கைக்கடிகாரங்களைப் பார்த்துக்கொள்ளுவதுண்டு. ஆனால் வீட்டுச் சபை போதனை வேளையில் நேரம் கடந்துபோவதையே உணர முடியாது. தாங்கள் சோர்வளித்துவிடுவோமோ என்று வீட்டுச் சபைப் போதகர்கள் கவலைப்பட வேண்டிய அவசியமேயில்லை.





வரும் தங்கள் ஆவிக்குரிய வரங்களைப் பயன்படுத்தும்படி ஊக்குவிக்க முடியும். அவர் கூட்டங்களுக்கு வராவிட்டாலும், எல்லாம் சுமுகமாக நடக்கின்றன.

கவனத்தைச் சிதைக்கக் கட்டிடம் எதுவும் கிடையாது, எந்த உதவியாளரையும் நிர்வகிக்க வேண்டிய அவசியமில்லை.

மற்ற உள்ளூர் சபைப் போதகர்களோடு அவர் போட்டியிட வேண்டிய அவசியமேயில்லை.

அவருடைய வாழ்க்கையைப் பரிதாபமாக்கக்கூடிய சபை நிர்வாகக் குழு எதுவும் கிடையாது. இத்தகைய குழுக்களில் அரசியல்ரீதியான சச்சரவுகள் அதிகமாகக் காணப்படுகின்றன.

சுருக்கமாகச் சொல்லுவோமானால், கலாச்சாரக் கிறிஸ்தவத்தினால் திணிக்கப்படுகிறபடி அல்ல, தேவன் அவரை அழைத்தபடியே அவரால் ஊழியம்செய்ய முடியும். அவர் முக்கிய நடிகராகவோ ஒரு நிறுவனத்தின் தலைவராகவோ அல்லது சக்கரத்தின் குடத்தில் மையமானவராகவோ இருக்கவில்லை. அவர் சீஷர்களை உருவாக்குபவராக, பரிசுத்தவான்களை ஆயத்தப்படுத்துபவராக இருக்கிறார்.

## சந்தோஷமான ஆடுகள்

மெய்யான, வேதாகமரீதியான வீட்டுச்சபையிலுள்ள எல்லாக் காரியங்களையும் மெய்யான விசுவாசிகள் விரும்புகிறார்கள், அவைகளை அனுபவிக்கிறார்கள்.

மெய்யான விசுவாசிகள் எல்லோரும் மற்ற விசுவாசிகளோடு உண்மையான உறவுக்காக வாஞ்சிக்கிறார்கள். ஏனென்றால் அவர்கள் தங்கள் இருதயத்தில் தேவ அன்பை ருசித்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட உறவுகள் வீட்டுச்சபையின் பங்குகளாக இருக்கின்றன. இதையே வேதாகமம் *ஐக்கியம்* என்று குறிப்பிடுகிறது. இது மற்றச் சகோதர சகோதரிகளோடு ஒருவர் தனது வாழ்க்கையை மெய்யாகவே பகிர்ந்து கொள்ளுவதைக் குறிக்கிறது. விசுவாசிகள் எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்வதற்கான சூழலை வீட்டுச் சபை உருவாக்கிக் கொடுக்கிறது. ‘‘ஒருவர் மற்றவருக்குச்’’ செய்ய வேண்டிய பல காரியங்கள் புதிய ஏற்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளன. வீட்டுச் சபைப் பின்னணியில் விசுவாசிகள் போதிக்கவும், ஊக்கமளிக்கவும், பக்தி விருத்தியுண்டாக்கவும், ஆறுதலளிக்கவும், போதிக்கவும், ஊழியம்செய்யவும், ஒருவர் மற்றவருக்காக ஜெபிக்கவும் முடியும். அவர்கள் ஒருவர் மற்றவருக்கு அன்புகாட்டும்படியும், நற்கிரியைகளைச் செய்யும்படியும் தூண்டுதலளிக்க முடியும், தங்கள் பாவங்களை ஒருவர் மற்றவருக்கு அறிக்கையிட முடியும், ஒருவர் மற்றவரின் பாரங்களைத் தாங்க முடியும், சங்கீதங்கள், பாமாலைகள், ஞானப்பாட்டுகள் இவைகளால் ஒருவர் மற்றவருக்குப் புத்திசொல்ல முடியும்.

அழுகிறவர்களோடு அவர் களால் அழ முடியும், களிகூருகிறவர்களோடு சேர்ந்து களிகூர முடியும். விசுவாசிகள் உட்கார்ந்து, பார்த்துக்கொண்டிருக்கும் அமைப்புச் சார்ந்த சபைகளில் இப்படிப்பட்ட காரியங்கள் பெரும்பாலும் நடப்பதில்லை. ஒரு வீட்டுச் சபையின் உறுப்பினர் என்னிடம் ‘‘எங்கள் சபையில் ஒருவர் நோய்வாய்ப்பட்டிருக்கும்போது, நான் ‘உணவு ஊழியத்தில்’ சேர்ந்திருக்கிறபடியால் அந்நியர் ஒருவருக்கு உணவை எடுத்துச் செல்லுவதில்லை. நான் அறிந்து அன்புகாட்டும் ஒருவருக்கே எடுத்துச் செல்லுகிறேன்’’ என்று சொல்லியிருக்கிறார்.

மெய்யான விசுவாசிகள் ஒருவரோடொருவர் சந்தோஷத்தோடு இடைபடுகிறார்கள். ஒன்றுமே செய்யாமல் அமர்ந்திருந்து, பல ஆண்டுகளாகப் பொருத்தமில்லாத, மந்தமான பிரசங்கங்களுக்குச் செவிகொடுக்க வேண்டியிருப்பது அவர்களுடைய அறிவுக்கும், ஆவிக்குரிய தன்மைக்கும் இழுக்காக இருக்கிறது. மாறாக, தேவனைக்குறித்தும் தேவனுடைய வார்த்தையைக் குறித்தும் தாங்கள் தனிப்பட்ட முறையில் பெற்றுக்கொண்ட உள்ளறிவை மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ள அவர்கள் விரும்புகிறார்கள். ஒரு கலாச்சார முன்மாதிரியைப் பின்பற்றாமல், வேதாகம முன்மாதிரியைப் பின்பற்றுவதின் மூலம் ‘‘ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம் பண்ணுகிறான், ஒருவன் அந்நியபாஷையைப் பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான்’’ [1 கொரி. 14:26]. வீட்டுச் சபையில் எவரும் கூட்டத்தில் மறைந்துபோவதில்லை, அல்லது சபை அரசியல் காரணமாக விட்டுவிடப்படுவதில்லை.

தாங்கள் ஊழியத்தில் தேவனால் பயன்படுத்தப்பட வேண்டும் என்று மெய்யான விசுவாசிகள் விரும்புகிறார்கள். வீட்டுச் சபையில் மற்றவர்களை ஆசீர்வதிப்பதற்கு ஒவ்வொருவரும் பயன்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறது. பொறுப்புகள் எல்லோராலும் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன. எனவே அமைப்புச் சார்ந்த சபைகளின் ஒப்படைப்புள்ள உறுப்பினர்களைப் போல மனச் சோர்வடைவதில்லை. பொதுவான உணவில் பகிர்ந்துகொள்ளுவதற்காக எவரும் உணவைக் கொண்டு வரலாம். வேதாகமம் இதை ‘‘அன்பின் விருந்து’’ என்று அழைக்கிறது [யூதா 1:12]. பல வீட்டுச் சபைகளில் உணவானது நமது ஆண்டவரின் கடைசி இராப்போஜனத்தின் மாதிரியைப் பின்பற்றுகிறது; அது மெய்யாகவே பஸ்கா உணவின் ஒரு பங்காகும். கர்த்தருடைய இராப்போஜனமானது நான் முன்பு போதகராக இருந்த அமைப்புச் சார்ந்த சபையில் ஒரு சிறுவன் சொல்லியதுபோல ‘‘தேவனுடைய பரிசுத்த சிற்றுண்டி’’ அல்ல. ஒரு சபை ஆராதனையின்போது ஒருசில வினாடிகளில் முற்றிலும் அறிமுகமில்லாதவர்களின் மத்தியில் ஒரு சிறிய அப்பத்தை உண்டு, கொஞ்சம் இரசத்தைக் குடிப்பது வேதாகமத்தில் காணப்படாத ஒரு பழக்கமாகும், வேதாகமரீதியான வீட்டுச் சபை





களிலும் இப்படிக் காணப்படவில்லை. ஒருவர் மற்றவரின்மீது அன்பு காட்டும் சீஷர்களின் நடுவே உணவு பகிர்ந்துகொள்ளப்படும்போது ஐக்கிய விருந்து என்பதின் சாக்கிரமெந்து சார்ந்த அர்த்தம் மெய்யாக வெளிப்படுகிறது.

வீட்டுச் சபையில் ஆராதனை எளிமையானது, உண்மையானது, எல்லோரையும் பங்கெடுக்க வைப்பதாகும். மெய்யான விசுவாசிகள் ஆவியோடும் உண்மையோடும் தேவனைத் தொழுதுகொள்ள விரும்புகிறார்கள்.

## கோட்பாட்டுரீதியான சமநிலையும் சகிப்புத் தன்மையும்

ஒரு சிறிய சபைக் கூடுகையின் வெளியரங்கமான சூழலில் வாசிக்கத் தெரிந்த எல்லோரும் எல்லாப் போதனைகளையும் சீர்தூக்கிப் பார்க்க முடியும். ஒருவரையொருவர் அறிந்து, அன்புகாட்டும் சகோதர சகோதரிகள் தங்களுடைய கருத்துக்கு வேறுபட்ட கருத்துக்களையும் மரியாதையோடு சீர்தூக்கிப் பார்க்கிறார்கள். குழுவினர் ஒட்டுமொத்தமாக அதை ஒப்புக்கொள்ளாவிட்டாலும், கோட்பாடு அல்ல, அன்பே அவர்களை ஒன்றாகப் பிணைக்கிறது. மூப்பர்கள்/போதகர்கள்/கண்காணிகள் உட்படக் குழுவிலுள்ள எந்த நபரும் கொடுக்கும் எந்தப் போதனையையும் எல்லோரும் அன்போடு சீர்தூக்கிப் பார்க்கிறார்கள்; ஏனென்றால் ‘‘போதிப்பவர்’’ அவர்களுக்குள் நிலைத்திருக்கிறார் [பார்க்க, 1 யோவான் 2:27]. வேதாகமரீதியான முன்மாதிரியின்படி உள்ளுக்குள்ளேயே சோதிக்கப்படுவதால், அவர்கள் கோட்பாட்டுரீதியாக வழிவிலகிப் போகும் வாய்ப்பு ஏற்படுவதில்லை.

இது தற்போதைய அமைப்புச் சார்ந்த சபைகளில் காணப்படும் மாதிரிக்கு முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது. அங்கே சபையின் கோட்பாடு துவக்கத்திலிருந்தே உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது, அதை எவரும் எதிர்க்க முடியாது. இதன் காரணமாக மோசமான கோட்பாடுகளும்கூட நிரந்தரமாக இடம் பிடித்துள்ளன. கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளுபவர்களே சபையில் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள். இதன் காரணமாகவே ஒரு பிரசங்கத்தில் ஒரு குறிப்பு வித்தியாசமாக இருக்குமானால், அதைக் குறித்துக் கசப்படைகிறவர்கள் ‘‘தங்களைப் போன்ற சிந்தனை கொண்ட விசுவாசிகளைத் தேடி’’ தாற்காலிகமாகச் சபையை விட்டு வெளியேறுகிறார்கள். தாங்கள் இந்தக் கோட்பாட்டை ஒப்புக்கொள்ளவில்லை என்று போதகரிடம் சொல்லுவதில் அர்த்தமில்லை என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். அவர் தனது கருத்தை மாற்றும்படி வற்புறுத்திப் பணிய வைத்தாலும், அவர் அதைச் சபையில் பெரும்பாலானவர்களிடமிருந்தும், தனது சபைப்பிரிவில் மேலான அதிகாரத்திலிருப்பவர்களிடமிருந்தும் மறைத்து வைக்க வேண்டியிருக்கிறது. அமைப்புச் சார்ந்த சபைகளிடையே காணப்படும் கோட்பாட்டு வேறுபாடுகளின் காரணமாக உலகத்திலேயே அதிகத் திறன்வாய்ந்த

அரசியல்வாதிகளைப் போன்ற போதகர்கள் உருவாக்கப்படுகிறார்கள், அவர்கள் தெளிவில்லாதபடி பொதுவாகப் பேசி, கருத்து வேறுபாட்டைக் கொண்டுவரக் கூடிய எதையும் தவிர்க்கிறார்கள். இப்படியாக தான் அவர்களுடைய பக்கத்தில் இருப்பதாக எல்லோரையும் நம்பச் செய்கிறார்.

## ஒரு நவீனப் போக்கு

அதிகமதிகமான அமைப்புச் சார்ந்த சபைகள், தங்கள் அமைப்பின் மாதிரிகளுக்குள்ளாகச் சிறு குழு வடிவமைப்புகளை இன்னுமதிக மதிகமாக உருவாக்கிக்கொண்டிருக்கின்றன. சீஷராக்குவதில் சிறு குழுக்களின் மதிப்பை அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். சில சபைகள் சிறுகுழுக்களின் வடிவில் தங்கள் உள்ளான வடிவமைப்பைக் கொண்டி ருக்கின்றன. அவைகளையே தங்கள் ஊழியத்தின் மிக முக்கியமான அம்சமாக இவர்கள் கருதுகிறார்கள். சிறுகுழுக்களைவிடப் பெரிய ''கொண்டாட்டக் கூட்டங்கள்'' முக்கியத்துவத்தைப் பொருத்த வரையில் இரண்டாம்பட்சமாகவே இருக்கின்றன [குறைந்த பட்சம் கொள்கை அளவிலாவது].

இவை சரியான திசையில் எடுத்துவைக்கப்பட்டிருக்கும் அடி களாகும், தேவன் இந்த அடிகளை ஆசீர்வதிக்கிறார். ஏனென்றால் நாம் எவ்வளவாக அவருடைய சித்தப்படி செயல்படுகிறோமோ, அவ்வளவாக அவர் நம்மை ஆசீர்வதிக்கிறார். உண்மையில்,அமைப்புச்சார்ந்த சபை களைவிட, ''செல் சபைகள்'' சீஷராக்குவதை ஊக்குவிக்கக்கூடிய வடிவமைப்பைப் பெற்றிருக்கின்றன. இவை அமைப்புச்சார்ந்த சபையின் மாதிரிக்கும், வீட்டுச் சபை மாதிரிக்கும் நடுவே நிற்கின்றன, இரண்டிலுமிருந்தும் சில அம்சங்களை எடுத்துக்கொண்டிருக்கின்றன.

சிறு குழுக்களைக் கொண்ட அமைப்புச் சார்ந்த சபைகளையும், துவக்ககால மற்றும் நவீன வீட்டுச் சபைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் நாம் சில வேறுபாடுகளைக் காண முடியும்.

எடுத்துக்காட்டாக, அமைப்புச் சார்ந்த சபைக்குள்ளிருக்கும் சிறு குழுக்கள், தலைமைப் போதகரின் சபை ராஜ்யத்தைக் கட்டியெழுப்பு வதையே நோக்கமாகக் கொண்டிருக்குமானால், அவை அமைப்புச் சார்ந்த சபைக்குள்ளேயுள்ள பல தவறான காரியங்களைத் தாங்களும் கொண்டிருக்கின்றன. இதன் விளைவாக, தலைமைப் போதகர் தனது சொந்த ஆதாயத்துக்காக மக்களைப் பயன்படுத்துகிறார், சிறு குழுக்கள் இந்தத் திட்டத்துக்குச் சரியாகப் பொருந்திவருகின்றன. இப்படிப்பட்ட நிலையில், சிறுகுழுத் தலைவர்கள் தாய்ச்சபைக்கு அவர்கள் உண்மை யுள்ளவர்களாக இருக்கிறார்களா என்பதின் அடிப்படையில் தெரிந் தெடுக்கப்படுகிறார்கள். அவர்கள் அதிக வரம்பெற்றவர்களாகவோ அருட்கொடை சார்ந்தவர்களாகவோ இருக்க மாட்டார்கள்; ஏனென்றால்





தாங்களாகவே சபையை நடத்தலாம் என்ற எண்ணத்தைப் பிசாசானவன் அவர்களுக்குக் கொடுத்துவிடக் கூடாது அல்லவா? இப்படிப்பட்ட கொள்கை சிறுகுழுக்கள் ஆற்றலோடு செயல்படுவதற்குத் தடையாக இருக்கின்றன. மற்ற அமைப்புச் சார்ந்த சபைகளில் இருப்பது போலவே அழைப்பைப் பெற்றுத் தலைவராக வேண்டும் என்ற வாஞ்சையோடு இருப்பவர்கள் வேதாகமப் பள்ளிகளுக்கும், இறையியல் கல்லூரி களுக்கும் அனுப்பப்படுகிறார்கள். இதனால் சபை அவர்களுடைய உண்மையான வரங்களை இழந்துபோகிறது. அவர்களும் வேலை செய்து கொண்டே சீஷராக்கப்படுவதற்கு மாறாக, விரிவுரைகளுக்குச் செவிகொடுக்கும்படி அனுப்பப்படுகிறார்கள்.

அமைப்புச் சார்ந்த சபையின் சிறுகுழுக்கள் பெரும்பாலும் ஐக்கியக் குழுக்களாகவே மாறுகின்றன. உண்மையில் சீஷராக்குதல் நடப்பதில்லை. மக்கள் ஞாயிற்றுக்கிழமை காலைப் பிரசங்கத்தினால் ஆவிக்குரிய பிரகாரமாகப் போஷிக்கப்படுவதாகக் கருதப்படுகிற படியால், இந்தச் சிறுகுழுக்கள் தேவனுடைய வார்த்தைக்கு அப்பாற்பட்ட காரியங்களில் கருத்தை வைக்கின்றன. ஏனென்றால் ஞாயிறு காலையில் நடப்பதை அவர்கள் மறுபடியுமாகச் செய்ய விரும்புவதில்லை.

அமைப்புச் சார்ந்த சபையிலுள்ள சிறுகுழுக்கள் பெரும்பாலும் ஆவியானவரால் பிறப்பிக்கப்படுவதில்லை, சபையின் அலுவலர் ஒருவரே அதை ஒழுங்குசெய்கிறார். இந்தக் குழுக்கள் சபையின் பல செயல்திட்டங்களைப்போல ஒரு செயல்திட்டமாக இருக்கின்றன. வயது, சமுதாய நிலை, பின்னணி, ஆர்வங்கள், திருமணத் தகுதி அல்லது இருக்குமிடத்தின் அடிப்படையில் மக்கள் ஒன்றாக இணைக் கப்படுகிறார்கள். இதனால் பெரும்பாலும் வெள்ளாடுகளும், செம்மறி யாடுகளோடு சேர்ந்துகொள்ளுகின்றன. இந்த மாம்சீகமான அமைப்புகள் விசுவாசிகள் தங்கள் வேறுபாடுகளின் மத்தியிலும் ஒருவர் மற்றவரிடம் அன்புகாட்டும்படி தூண்டுவதில்லை. பல துவக்ககாலச் சபைகளில் யூதர்களும் புறஜாதியாரும் சேர்ந்திருந்தார்கள் என்பதை மறந்துவிடாதீர் கள். அவர்கள் ஒழுங்காகச் சேர்ந்து உணவருந்தினார்கள், இந்த உணவு வகைகளில் சில யூதர்களின் பாரம்பரியத்தின்படி தடை செய்யப்பட்ட வையாகும். இந்தக் கூட்டங்கள் எப்படிப்பட்ட வகையில் கற்றுக் கொள்ளும் அனுபவத்தைக் கொடுத்திருக்க வேண்டும்! அன்பிலே நடப்பதற்கு எப்படிப்பட்ட வாய்ப்புக்கள்! சுவிசேஷத்தின் வல்லமை குறித்து எப்படிப்பட்ட சாட்சிகள்! இப்படியிருக்கும்போது, சிறு குழுக்கள் வெற்றிபெற வேண்டுமானால் எல்லோரும் ஒரே வகைப்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்று நாம் ஏன் நினைக்க வேண்டும்?

சிறு குழுக்களைக் கொண்ட அமைப்புச் சார்ந்த சபைகளில் இப்போதும் ஞாயிறு காலை ஆராதனை நடக்கிறது. பார்வையாளர்கள்

பார்த்துக்கொண்டிருக்க செயல்படுபவர்கள் தங்கள் சாதனைகளைக் காட்டுகிறார்கள். ''மெய்யான'' சபை ஆராதனை நடக்கும் வேளையில் சிறுகுழுக்கள் கூடுவதற்கு அனுமதி கொடுக்கப்படுவதில்லை. அமைப்புச் சார்ந்த சபையின் ஆராதனைகளே மிகவும் முக்கியமானவை என்பது இதன்மூலமாகக் காட்டப்படுகிறது. இந்தப் பிரசங்கத்தின் காரணமாக, ஞாயிறு காலை ஆராதனையில் கலந்துகொள்ளுபவர்களில் பலர் அவர்களை ஊக்குவித்தாலும்கூடச் சிறுகுழுக் கூட்டங்களில் கலந்துகொள்ள மாட்டார்கள். இரண்டில் ஒன்றைத் தெரிந்துகொண்டால் போதுமானது என்றே அவர்கள் நினைக்கிறார்கள். மிக முக்கியமான வாராந்திர ஆராதனையில் தாங்கள் பங்குகொண்டிருப்பதில் அவர்கள் திருப்தியடைந்துவிடுகிறார்கள். எனவே சிறுகுழு குறித்த கருத்து முக்கியமானது என்று வலியுறுத்தப்படலாம், ஆனால் அமைப்புச் சார்ந்த சபையின் ஞாயிறு ஆராதனையைப் போல அது முக்கியமானது என்று வலியுறுத்த முடியாது. மெய்யான ஐக்கியத்துக்கும், சீஷத்துவத்துக்கும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் கிடைக்கும் வாய்ப்பைக் குறைத்துக் கூறுகிறார்கள். தவறான செய்தி அனுப்பப்படுகிறது. அமைப்புச் சார்ந்த சபையின் ஆராதனையே இப்போதும் ராஜாவாக இருக்கிறது.

## இன்னுமதிக வேறுபாடுகள்

சிறு குழுக்களைக் கொண்ட அமைப்புச் சார்ந்த சபைகள் இப்போதும் ஒரு கூம்பு வடிவிலான வடிவமைப்பையே பெற்றிருக்கின்றன. இந்த ஆளுகைவரிசையில் ஒவ்வொருவரும் தனக்குரிய இடத்தை அறிந்திருக்கிறார்கள். உச்சியிலுள்ள தலைவர்கள் தங்களை ''சேவக தலைவர்கள்'' என்று அழைத்துக்கொண்டாலும், பெரும்பாலும் அவர்கள் நிர்வாகத் தீர்மானங்களை எடுக்கக் கூடிய தலைமை நிர்வாக அதிகாரிகளைப் போலவே இருக்கிறார்கள். சபை எவ்வளவு பெரியதாக இருக்கிறதோ அவ்வளவாகப் போதகர் தனது மந்தையின் உறுப்பினர்களைவிட்டு விலகியிருக்கிறார். அவர் ஒரு மெய்யான போதகராக இருப்பாரானால், ஒரு சிறிய மந்தைக்கு ஊழியம் செய்யும்போது தான் அதிகச் சந்தோஷமாக இருந்ததாக அவர் ஒப்புக்கொள்ளுவார்.

இதைப்போலவே, சிறு குழுக்களைக்கொண்ட அமைப்புச் சார்ந்த சபைகள் இப்போதும் குருத்துவ – சாமானியப் பிரிவைக் கொண்டிருக்கிறது. சிறுகுழுத்தலைவர்கள் எப்போதுமே தொழில்ரீதியாக ஊதியம் பெறுபவர்களுக்குக் கீழாகவே இருக்கிறார்கள். சிறு குழுத் தலைவருக்கு நம்பிக்கையோடு அதிகமான அதிகாரத்தைக் கொடுக்க முடியாது என்பதால், வேதாகம ஆய்வுப் பாடங்களைக் குருமார்களே தயாரித்துக்கொடுக்கிறார்கள், அல்லது அதற்காக அவர்களுடைய ஒப்புதலைப் பெற வேண்டும். சிறு குழுக்கள் கர்த்தருடைய இராப்போஜனம், ஞானஸ்நானம் ஆகியவைகளை ஆசரிக்க அனுமதிக்கப்படுவதில்லை. பட்டங்களையும் பதவிகளையும் பெற்றவர்களே இந்தப்





பரிசுத்த பணிகளைச் செய்ய முடியும். சரீரத்துக்குள்ளாக முழு நேர ஊழியத்துக்கு அழைக்கப்பட்டிருப்பவர்கள் முதலில் இந்த மேன்மையான குழுவோடு சேர்ந்து ''மெய்யான'' ஊழியத்தைச் செய்யத் தகுதியைப் பெறும்படி வேதாகமப் பள்ளியிலோ அல்லது இறையியல் கல்லூரியிலோ படிக்க வேண்டும்.

சில வேளைகளில் அமைப்புச் சார்ந்த சபைகளிலுள்ள சிறு குழுக் கூடுகைகள் சிறிய சபை ஆராதனைகளைப்போலவே இருக்கின்றன. 60 முதல் 90 நிமிடங்களில் கூட்டம் முடிந்துவிடுகிறது. வரம்பெற்ற ஒருவர் ஆராதனையை நடத்துகிறார், வரம்பெற்ற மற்றொருவர் ஒப்புக் கொள்ளப்பட்ட போதனையைக் கொடுக்கிறார். ஆவியானவர் மற்றவர்களைப் பயன்படுத்தவும், வரங்களைக் கொடுக்கவும், ஊழியர்களை உருவாக்கவும் வாய்ப்பில்லாமல் போய்விடுகிறது.

மக்கள் பெரும்பாலும் அமைப்புச் சார்ந்த சபைகளிலுள்ள சிறு குழுக்களுக்கு ஒப்படைப்புக் கொண்டிருப்பதில்லை. அவர்கள் ஒழுங்காகச் சிறுகுழுக்களில் கலந்துகொள்ளுவதில்லை. இவை தாற்காலிகமான குழுக்களாக இருக்கிறபடியால், வீட்டுச்சபைகளைப் போல ஒரே சமுதாயம் என்ற ஆழமான உணர்வு ஏற்படுவதில்லை.

அமைப்புச் சார்ந்த சபைகளிலுள்ள சிறு குழுக்கள் பெரும்பாலும் வார நாட்களில் கூடுகின்றன, ஞாயிறு ஆராதனைகளுக்கு இடையூறாக இருக்கக் கூடாது என்பதே இதற்குக் காரணமாகும். இதன் விளைவாக வார நாள் கூட்டங்களில் வரும் எவரும் இரண்டு மணி நேரத்துக்கு மேலாகக் கூட்டங்களில் செலவழிக்க முடியாது. பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகளைக் கொண்டிருப்பவர்களும், தொலைவில் இருப்பவர்களும் கலந்துகொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது.

அமைப்புச் சார்ந்த சபைகள் சிறுகுழு ஊழியத்தை ஊக்குவித்தாலும்கூட, மறுபடியுமாக ஒரு கட்டிடத்துக்காகப் பணத்தை விரயமாக்குகிறார்கள். உண்மையில், சிறு குழு செயல்திட்டமானது கூடுதலான மக்களைச் சபையில் சேர்க்குமானால், சபைக் கட்டிடச் செயல்திட்டத்துக்காகக் கூடுதலான பணம் செலவழிக்க வேண்டியிருக்கிறது. மேலும் அமைப்புச் சார்ந்த சபைகளினால் அமைக்கப்பட்டிருக்கும் சிறு குழுவை நிர்வகிக்க ஊதியம் பெறும் ஒரு அலுவலராவது தேவைப்படுகிறார். இதனால் கூடுதலான பணத்தைச் செலவழிக்க வேண்டியிருக்கிறது.

எல்லாவற்றையும்விட மோசமான காரியம் என்னவென்றால், சிறுகுழுக்களைக் கொண்ட அமைப்புச் சார்ந்த சபைகளின் போதகர்கள் தங்கள் தனிப்பட்ட சீஷராக்கும் ஊழியத்தில் அதிகமாகக் குறைவுபடுகிறார்கள். அவர்கள் பல பொறுப்புகளின் காரணமாகப் பரபரப்பாகச் செயல்படுவதால் ஒருவருக்கு – ஒருவர் அடிப்படையில் சீஷராக்குவதற்காக அதிகமான நேரத்தைச் செலவழிக்க முடிவதில்லை. சிறு

குழுத் தலைவர்களுக்கு மட்டுமே அவர்களால் சீஷத்துவ ஊழியம் செய்ய முடிகிறது. அதுவும் மாதம் ஒரு முறை நடக்கும் கூட்டத்தில் மட்டுமே இந்த ஊழியத்தைச் செய்ய முடிகிறது.

என்னுடைய கருத்தில், வீட்டுச் சபைகளே வேதாகமரீதியானவையாகவும், சீஷர்களை உருவாக்குவதிலும், சீஷர்களையும் சீஷராக்குபவர்களையும் பெருக்கமடையச் செய்வதிலும் ஆற்றலோடு செயல்படுவதாகவும் இருக்கின்றன என்பதை வலியுறுத்தவே இவைகளையெல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். எனது கருத்து பல நூற்றாண்டுகளாக இருந்து வரும் சபைப் பாரம்பரியத்தை உடனே மாற்றிவிடப் போவதில்லை என்பதையும் நான் உணர்ந்திருக்கிறேன். அமைப்புச் சார்ந்த சபைகளின் போதகர்கள் சீஷராக்குதல் குறித்த வேதாகம மாதிரியை நோக்கிச் செல்லும் வகையில் தங்கள் சபையை இயக்குவிக்க *ஏதேனும்* செய்ய வேண்டும் என்று நான் வலியுறுத்துகிறேன்.[17] வருங்காலத் தலைவர்களைச் சீஷராக்குவதில் அவர்கள் தனிப்பட்ட முறையில் ஈடுபட வேண்டும், அல்லது சிறு குழு ஊழியத்தைத் துவங்கிவைக்க வேண்டும். அவர்கள் துவக்ககாலச் சபையின் ஞாயிற்றுக்கிழமை ஆசரிப்பைப்போல ஆசரிப்பதைத் துவங்கலாம். அப்போது சபைக் கட்டிடம் மூடப்பட்டிருக்கும், எல்லோரும் வீடுகளில் உணவைப் பகிர்ந்துகொள்ளுவார்கள், இது முதல் மூன்று நூற்றாண்டு காலம் கிறிஸ்தவர்கள் எப்படிக் கூடிவந்தார்களோ அந்த மாதிரியைப் பின்பற்றுவது போலிருக்கும்.

தங்கள் சபைகளில் சிறுகுழுக்களைக் கொண்டிருக்கும் போதகர்கள் இந்தக் குழுக்களில் சில வீட்டுச் சபைகளாக உருவாகுமாறு அவைகளை விடுவிக்க வேண்டும். என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். சிறு குழுக்கள் ஆரோக்கியமானவைகளாக இருந்து, தேவனால் அழைக்கப்பட்ட மூப்பர்கள்/போதகர்கள்/கண்காணிகளால் அவை வழிநடத்தப்படுமானால், அவைகள் தானாகவே செயல்படக் கூடியவையாக இருக்கும். தாய்ச்சபையோடு தொடர்பில்லாமல் தானாகத் துவங்கப்பட்ட இளைய சபையைப் போல அவைகளுக்கு

[17] *ஒரு காரியத்தை மறுபடியும் மறுபடியுமாகச் செய்யும்போது விளைவுகள் வேறுபடும்* என்று எதிர்பார்ப்பதையே நான் *பைத்தியக்காரத்தனம்* என்று குறிப்படுகிறேன். ஒவ்வொரு உறுப்பினரும் சீஷராக்குவதில் ஈடுபடுவது அவர்களுடைய பொறுப்பு என்று போதகர்கள் பல்லாண்டுகளாகப் போதித்து வரலாம், ஆனால் வடிவமைப்புகளை மாற்றுவதற்கு அவர்கள் எதையாவது செய்யாவிட்டால், மக்கள் வெறுமனே சபையில் உட்கார்ந்து, செவிகொடுத்துவிட்டு வீட்டுக்குத் திரும்பிப் போய்விடுவார்கள். கடந்த காலத்தில் மக்களில் மாற்றத்தை உண்டாக்காத ஒன்றைப் போதகராகிய நீங்கள் தொடர்ந்து செய்து வருவீர்களானால், வருங்காலத்திலும் அது மக்களை மாற்றாது, நீங்கள் என்ன செய்கிறீர்களோ அதை மாற்றுங்கள்!





இனிமேலும் தாய்ச்சபை தேவைப்படாது. ஏன் அவைகளை விடுவிக்கக் கூடாது? [18] தாய்ச் சபைக்குச் செல்லும் உறுப்பினரின் பணம் வீட்டுச் சபையின் போதகரை ஆதரிக்கச் செலவழிக்கப்பட வேண்டும்.

வீட்டுச் சபைக்கு ஆதரவாக நான் பேசுகிறபடியால், அமைப்புச் சார்ந்த சபையைக் குறித்து எந்த நன்மையும் இல்லை என்று ஆகிவிடுமா? நிச்சயமாக இல்லை! கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியும் சீஷர்களை அமைப்புச் சார்ந்த சபை உருவாக்குமானால் அது பாராட்டப்பட வேண்டிய காரியம்தான். ஆனால் இந்தச் சபைகளின் செயல்பாடுகளும், வடிவமைப்பும் பெரும்பாலும் கிறிஸ்து நமக்கு முன்னால் வைத்திருக்கும் இலக்கை எட்டுவதில் சில வேளைகளில் இடையூறுகளாகவே இருக்கின்றன. மேலும் அவை போதகர்களைக் கொன்றுபோடுகிறவையாக இருக்கின்றன.

### ஒரு வீட்டுச் சபைக் கூடுகையில் என்ன நடக்கிறது?

எல்லா வீட்டுச் சபைகளும் ஒரே வடிவமைப்பைப் பெற்றிருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. வெவ்வேறு வகைகளில் அவை வடிவமைக்கப்படலாம். ஒவ்வொரு வீட்டுச் சபையும் அதற்குரிய கலாச்சார மற்றும் சமுதாய நுட்ப வேறுபாடுகளைப் பிரதிபலிக்க வேண்டும் – சுவிசேஷ ஊழியத்தில் வீட்டுச் சபைகள் அதிக ஆற்றல் கொண்டிருப்பதற்கு இது ஒரு காரணமாகும். குறிப்பாக கிறிஸ்தவ கலாச்சார பாரம்பரியத்தைக் கொண்டிராத நாடுகளில் இதை நாம் காணலாம். வீட்டுச் சபை உறுப்பினர்கள் தங்கள் அண்டைவீட்டாரை ஒரு சபைக் கட்டிடத்துக்கு அழைக்கவில்லை; அந்தக் கட்டிடமும் அங்கே நடக்கும் சடங்குகளும் அவர்களுக்கு அந்நியமாகத் தோன்றுகின்றன – மனமாற்றத்துக்கு இவையே பெரிய தடைகளாக இருக்கின்றன. மாறாக, வீட்டுச் சபை உறுப்பினர்கள் அவர்களைத் தங்கள் நண்பருடைய வீட்டில் உணவருந்தும்படி அழைக்கிறார்கள்.

இப்படிப் பொதுவாக உணவருந்துவது வீட்டுச் சபைக் கூடுகையின் மிக முக்கியமான அம்சமாகும். பல வீட்டுச் சபைகளில் இந்த உணவு கர்த்தருடைய இராப்போஜனத்தை உள்ளடக்கியிருக்கிறது அல்லது இராப்போஜனமாகவே இருக்கிறது. ஒவ்வொரு வீட்டுச் சபையும் இதன் முக்கியத்துவத்தை எப்படிச் சிறப்பாக வெளிக்கொண்டு வருவது என்பதைக் குறித்துத் தீர்மானிக்கலாம். ஏற்கெனவே குறிப்பிட்டபடி முதல் கர்த்தருடைய இராப்போஜனம் பஸ்கா உணவின் ஒரு பகுதியாக இருந்தது, அது தன்னில்தானே முக்கியத்துவத்தைக் கொண்டிருந்தது. துவக்ககால விசுவாசிகள் ஒன்றாகக் கூடிவரும்போது

[18] பெரும்பாலான போதகர்கள் உண்மையில் தேவனுடைய ராஜ்யத்தைக் கட்டாமல், தங்கள் சொந்த ராஜ்யத்தைக் கட்டிக்கொண்டிருப்பதுதான் அவர்கள் இந்தக் கருத்தை வெறுப்பதற்கு அடிப்படைக் காரணமாகும்.

கர்த்தருடைய இராப்போஜனத்தை ஒரு உணவாக ஆசரிப்பதோ அல்லது ஒரு உணவின் பகுதியாக ஆசரிப்பதோ அவர்களுடைய ஒழுங்காக இருந்தது. துவக்ககாலக் கிறிஸ்தவர்களைக் குறித்து நாம் இப்படி வாசிக்கிறோம்:

> அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், *அப்பம் பிட்குதலிலும்*, ஜெபம்பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள். ...அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய்த் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, *வீடுகள்தோறும் அப்பம் பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி...* [அப். 2:42, 46 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது].

துவக்ககாலக் கிறிஸ்தவர்கள் அப்பத்தை எடுத்து, அதைப் பிட்டு, தங்களுக்குள் பகிர்ந்துகொண்டார்கள். அவர்களுடைய கலாச்சாரத்தில் ஒவ்வொரு உணவு வேளையிலும் இது செய்யப்பட்டது. இப்படி உணவு வேளையில் அப்பத்தைப் பிட்குதல் துவக்ககாலக் கிறிஸ்தவர்களுக்கு ஏதேனும் ஆவிக்குரிய முக்கியத்துவத்தைக் கொடுத்ததா? வேதாகமம் நிச்சயமாகச் சொல்லவில்லை. ஆனால் வில்லியம் பார்க்ளே தனது *கர்த்தருடைய இராப்போஜனம்* என்ற நூலில் ''கர்த்தருடைய இராப் போஜனமானது ஒரு தனிப்பட்ட வீட்டில் குடும்ப உணவாகவோ அல்லது நண்பர்களிடையே பகிர்ந்துகொள்ளப்பட்ட உணவாகவோ துவங்கியது என்பதில் ஐயமில்லை... ஒரு சிறிய துண்டு அப்பத்துக்கும், சிறிதளவு ரசத்தை பருகுவதற்கும், துவக்கத்தில் நடந்த கர்த்தருடைய இராப்போஜனத்துக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை... துவக்கத்தில் கர்த்தருடைய இராப்போஜனம் என்பது நண்பர்களுடைய வீட்டில் குடும்பமாகப் பகிர்ந்துகொண்ட உணவாக இருந்தது'' என்று எழுதி யிருக்கிறார். தற்போதைய வேதாகம வல்லுநர்கள் ஒவ்வொருவரும் இதை ஒப்புக்கொண்டாலும், சபையானது தேவனுடைய வார்த்தை யைப் பின்பற்றாமல் பாரம்பரியத்தைப் பின்பற்றுவது விந்தையாக இருக்கிறது!

இயேசுவானவர் தமது சீஷர்களுக்குத் தாம் கட்டளையிட்ட எல்லாவற்றுக்கும் கீழ்ப்படியும்படி அவர்கள் தங்கள் சீஷர்களுக்குப் போதிக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார். எனவே தம்மை நினைவுகூரும்படி அப்பத்தை உண்டு, திராட்சரசத்தைப் பருகுமாறு அவர் கட்டளையிட்டிருக்கிறபடியால், அவர்களும் தங்கள் சீஷர் களுக்கு இதற்குக் கீழ்ப்படியும்படி போதித்திருப்பார்கள். பொதுவான சாப்பாட்டு வேளையின்போது இது நடத்தப்பட்டிருக்குமா? கொரிந்திய விசுவாசிகளுக்குப் பவுல் எழுதியிருக்கும் வார்த்தைகளை வாசிக்கும் போது இப்படித்தான் தோன்றுகிறது:





> நீங்கள் ஓரிடத்தில் கூடிவரும்போது [சபைக் கட்டிடம் எதவும் இல்லாதபடியால் அவர் சபைக் கட்டிடத்தில் கூடிவருவதைக் குறிப்பிடவில்லை], அவனவன் *தன்தன் சொந்த போஜனத்தை* முந்திச் சாப்பிடுகிறான்; ஒருவன் பசியாயிருக்கிறான், ஒருவன் வெறியாயிருக் கிறான். இப்படிச் செய்கிறது *கர்த்தருடைய இராப் போஜனம்பண்ணுவதல்லவே* [1 கொரி. 11:20–21 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது].

தற்போதைய சபைகளில் ஆசரிக்கப்படும் கர்த்தருடைய இராப்போஜனத்தைப் பவுல் குறிப்பிட்டிருப்பாரானால் இந்த வார்த்தை களுக்கு அர்த்தம் இல்லையே? தற்போதைய சபைகளில் இராப்போஜ னத்தைக் குறித்த காரியத்தில் ஒருவர் தனது சொந்த உணவைச் சாப்பிடுவதையும், ஒருவர் பசியாயிருப்பதையும், ஒருவர் குடித்து வெறியாயிருப்பதையும் குறித்துக் கூற முடியாது அல்லவா? மெய்யான உணவோடுகூடக் கர்த்தருடைய இராப்போஜனமும் ஆசரிக்கப்பட்டால் மட்டுமே இந்த வார்த்தைகளுக்கு அர்த்தம் இருக்கும். பவுல் தொடர்ந்து இவ்வாறு சொல்லுகிறார்:

> புசிக்கிறதற்கும் குடிக்கிறதற்கும் உங்களுக்கு வீடுகள் இல்லையா? தேவனுடைய சபையை [பவுல் ஒரு கட்டிடத்தைக் குறித்துக் கூறவில்லை, தேவனு டைய சபையாக மக்கள் கூடுவதையே குறிப்பிடுகிறார் என்பதை நினைவில் வைத்திருங்கள்] அசட்டை பண்ணி, இல்லாதவர்களை வெட்கப்படுத்துகிறீர்களா? உங்களுக்கு நான் என்ன சொல்லுவேன்? இதைக் குறித்து உங்களைப் புகழ்வேனோ? புகழேன் [1 கொரி. 11:22].

உண்மையான சாப்பாட்டைக் குறிப்பதாக இந்த வசனம் இருந்தால் மட்டுமே உணவு இல்லாதவர்கள் வெட்கப்படுகிறார்கள் என்பது பொருத்தமாக இருக்கும். சபை கூடுமிடத்துக்கு முன்கூட்டியே வந்த கொரிந்திய விசுவாசிகள் மற்றவர்கள் வரும்வரை காத்திராமல் தங்கள் உணவை எடுத்துச் சாப்பிடுகிறார்கள் என்றே பவுல் சுட்டிக்காட்டுகிறார். பொதுவான உணவில் பகிர்ந்துகொள்ளுவதற்கு உணவு கொண்டுவர முடியாத ஏழ்மை நிலையில் இருந்த சிலர் வந்தபோது, அவர்கள் பட்டினி கிடக்கும்படி விடப்பட்டது மட்டுமின்றி, அவர்களிடம் ஒன்றுமில்லை என்பது வெளிப்படையாகத் தெரிந்தபடியால் அவர்கள் வெட்கப்படவும் நேர்ந்திருக்கிறது.

இதைத் தொடர்ந்து, தான் கர்த்தரிடத்தில் பெற்றுக்கொண்ட சாக்கிரமெந்தைப் பற்றிப் பவுல் இன்னும் எழுதுகிறார் [1 கொரி. 11:23]. முதல் கர்த்தருடைய இராப்போஜனத்தில் நடந்த காரியங்களை அவர்

எடுத்துச் சொல்லுகிறார் [பார்க்க, 1 கொரி. 11:24–25]. பிறகு தகுதி யில்லாதவர்களாகக் கர்த்தருடைய இராப்போஜனத்தைப் புசிப்பதைக் குறித்து அவர் கொரிந்திய கிறிஸ்தவர்களை எச்சரிக்கிறார். ஒவ்வொருவரும் தன்னைத்தானே சோதித்தறிந்து இதில் பங்கு கொள்ளாவிட்டால் அவர்கள் பலவீனம், நோய், மரணம் இவைகளின் மூலம் தங்களுக்குத் தாங்களே நியாயத்தீர்ப்பை வருவித்துக்கொள்ளு கிறார்கள் [பார்க்க, 1 கொரி. 11:26–32].

அவர் முடிவாக இப்படிச் சொல்லுகிறார்:

> ஆகையால், என் சகோதரரே, நீங்கள் போஜனம் பண்ணக் கூடிவரும்போது, ஒருவருக்காக ஒருவர் காத்திருங்கள். நீங்கள் ஆக்கினைக்கேதுவாகக் கூடி வராதபடிக்கு, ஒருவனுக்குப் பசியாயிருந்தால் வீட்டிலே சாப்பிடக்கடவன் [1 கொரி. 11:33–34].

கர்த்தருடைய இராப்போஜனத்தின்போது செய்யப்பட்ட குற்றம் மற்ற விசுவாசிகளைக் குறித்துக் கருதாமல் இருந்ததாகும். எல்லோரும் பகிர்ந்து உண்ண வேண்டிய ஒரு சாப்பாட்டில் தங்களுடைய உணவை முதலில் சாப்பிடுகிறவர்கள் தேவனால் நியாயந்தீர்க்கப்பட அல்லது சிட்சிக்கப்படப் பாத்திரமானவர்களாக இருக்கிறார்கள் என்று பவுல் எச்சரிக்கிறார். இதற்கான தீர்வு எளிதானதாகும். ஒருவர் மற்றவர் களுக்காகக் காத்திருக்கக் கூடாத அளவுக்குப் பசியோடிருந்தால் அவர் கூடுகைக்கு வருவதற்கு முன்பாக எதையாவது சாப்பிட்டுவிட்டு வர வேண்டும். முன் கூட்டியே வருபவர்கள் மற்றவர்கள் வருவதற்காகக் காத்திருக்க வேண்டும். இந்த உணவு கர்த்தருடைய இராப்போஜனமாக இருந்தது, அல்லது அதை உள்ளடக்கியிருந்தது.

இந்த முழுப் பகுதியையும் நாம் ஒன்றாகப் பார்க்கும்போது, பவுல் *கர்த்தருடைய* இராப்போஜனம் உண்ணப்படுமானால், அது *கர்த்தருக்குப்* பிரியமான வகையில் செய்யப்பட வேண்டும், ஒருவர் மற்றவரின்மீதான அன்பையும், கரிசனையையும் அது பிரதிபலிக்க வேண்டும் என்று சொல்லுவது தெளிவாகிறது.

துவக்ககாலச் சபையினர் வீடுகளில் பொதுவான உணவு உண்ணும் வேளையில் சிறப்பான குருமார்களின் தலைமை இல்லாமல் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரித்தார்கள் என்பது தெளிவாகிறது. நாமும் ஏன் இப்படியே செய்யக் கூடாது?

### அப்பமும் திராட்சரசமும்

கர்த்தருடைய இராப்போஜனத்திலுள்ள அம்சங்களின் இயல்பு மிக முக்கியமான காரியம் அல்ல. துவக்கத்தில் ஆசரிக்கப்பட்ட கர்த்தருடைய இராப்போஜனத்தை நாம் மிகச் சரியாக ஆசரிக்க வேண்டு மானால், அப்பம் எவைகளைக் கொண்டு தயாரிக்கப்பட்டது, எப்படிப்





பட்ட திராட்சப் பழங்களைக் கொண்டு இரசம் தயாரிக்கப்பட்டது என்பதைச் சரியாக அறிந்திருக்க வேண்டும். [முதல் சில நூற்றாண்டு களில் சபைப் பிதாக்கள் திராட்சரசத்தில் தண்ணீர் சேர்த்து நீர்த்துப் போகச் செய்ய வேண்டும் என்று கண்டிப்பாகக் கட்டளையிட்டார்கள். இல்லா விட்டால் திருவிருந்து சரியாக ஆசரிக்கப்படவில்லை என்று அர்த்தமாகியது].

அப்பமும் திராட்சரசமும் புராதன யூத வீடுகளில் சாதாரணமாகக் காணப்பட்ட உணவாகும். பொதுவாகக் காணப்பட்ட, எல்லோராலும் ஒவ்வொரு நாளும் எடுத்துக்கொள்ளப்பட்ட சாதாரண உணவைச் சேர்ந்த இரண்டு காரியங்களுக்கு இயேசு அற்புதமான முக்கியத்துவத்தைக் கொடுத்தார். அவர் வரலாற்றில் மற்றொரு வேளையில் மற்றொரு கலாச்சாரத்துக்கு வந்திருப்பாரானால், பாலாடைக் கட்டியையும், ஆட்டுப் பாலையும் அல்லது இட்டிலியையும், அன்னாசிப்பழச் சாற்றையும் தெரிந்துகொண்டிருப்பார். எனவே அவருடைய சீஷர்களின் மத்தியில் பகிர்ந்துகொள்ளப்படும் எந்த உணவும் பானமும் அவருடை.ய சரீரத்தையும் இரத்தத்தையும் பிரதிநிதித்துவம் செய்ய முடியும். ஆவிக்குரிய முக்கியத்துவமே முக்கியமான காரியமாகும். பிரமாணத்தை வார்த்தைக்கு வார்த்தை பின்பற்றும்போது, அதன் சாராம்சத்தை விட்டுவிடாதிருப்போமாக!

பொதுவான உணவை அருந்தும்போது, பயபக்தியோடு அமைதி யாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. நாம் ஏற்கெனவே வாசித்தபடி, துவக்ககாலக் கிறிஸ்தவர்கள் ''வீடுகள்தோறும் அப்பம்பிட்டு *மகிழ்ச்சியோடும்* கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணினார் கள்'' [அப். 2:46 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது]. இயேசுவின் பலி நினைவுகூரப்படும் வேளையில், அதற்குரிய அம்சங்கள் உண்ணப்படும் போது பயபக்தியோடு அதை ஆசரிப்பது அவசியமாகும். 1 கொரிந்தியர் 11:17–34 வசனங்களில் பவுல் கொரிந்திய கிறிஸ்தவர்களுக்கு எச்சரித்தபடி கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்கெடுப்பதற்கு முன்பாகத் தன்னைத்தானே ஆராய்ந்து பார்ப்பது பொருத்தமான காரிய மாகும். ஒருவர் மற்றவரிடம் அன்புகாட்ட வேண்டும் என்ற கிறிஸ்துவின் கட்டளை மீறப்படுமானால் ஒருவர் தேவனுடைய சிட்சையைச் சந்திக்க வேண்டியிருக்கும். உணவருந்துவதற்கு முன்பாக எல்லாப் பிணக்கு களுக்கும், பிரிவினைகளுக்கும் தீர்வு காணப்பட வேண்டும். பவுலின் வார்த்தையின்படி ''சோதித்தறிவது'' என்றால் தன்னைத்தானே ஆராய்ந்து பார்த்து, பாவங்களை அறிக்கையிட வேண்டும் என்பதாகும்.

### சரீரத்தின் மூலமாக வெளிப்படுத்தப்படும் ஆவியானவர்

பொதுவான உணவு ஒரு கூட்டத்துக்கு முன்பாகவோ அல்லது கூட்டத்தின்போதோ எடுத்துக்கொள்ளப்படலாம். இந்தக் கூட்டத்தில் ஆராதிப்பும், போதனைகளும், ஆவிக்குரிய வரங்களும் பகிர்ந்துகொள்ளப்

படுகின்றன. ஒவ்வொரு தனிப்பட்ட வீட்டுச் சபையும் இதன் வடிவமைப்பைத் தீர்மானிக்க வேண்டும். ஒரே வீட்டுச் சபையில் ஒவ்வொரு கூடுகையிலும் வெவ்வேறான வடிவமைப்புகள் காணப்படலாம்.

தற்போதைய அமைப்புச் சார்ந்த சபை ஆராதனைகளைவிடத் துவக்க காலச் சபைகள் முற்றிலும் வேறுபட்டிருந்தன என்பதை நாம் தெளிவாக அறிகிறோம். துவக்ககாலக் கிறிஸ்தவர்கள் கூடிவந்தபோது என்ன நடந்தது என்பது குறித்து 1 கொரிந்தியர் 11–14 அதிகாரங்களிலிருந்து அதிகமான விவரங்களைப் பெறுகிறோம். ஏன் அதே முறை இன்றும் பின்பற்றப்படக் கூடாது என்பதற்கு எந்தக் கராணமும் கிடையாது. பவுல் விவரித்திருக்கும் காரியங்கள் ஒரு சிறுகுழுப் பின்னணியில் மட்டுமே நடக்க முடியும் என்பதும் தெளிவாக இருக்கிறது. தர்க்கரீதியாகப் பார்க்கும் போது பவுல் கூறியிருப்பவை ஒரு பெரிய கூட்டத்தில் நடந்திருக்க முடியாது.

1 கொரிந்தியர் நிருபத்தில் இந்த நான்கு அதிகாரங்களிலும் கூறப்பட்டுள்ள எல்லாவற்றையும் நான் புரிந்துகொண்டிருக்கிறேன் என்று சொல்ல முடியாது. என்றாலும், 1 கொரிந்தியர் 11–14 அதிகாரங்களில் விவரிக்கப்பட்டுள்ள கூடுகைகளின் மிகவும் முக்கியமான பண்பு அவர்களுக்கு நடுவே பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னமாகும். சரீரத்திலுள்ள உறுப்பினர்களின் மூலமாக அவர் வெளிப்படுத்தப்பட்டார். முழுச் சரீரத்தின் பக்திவிருத்திக்காகவும் அவர் தனிப்பட்டவர்களுக்கு வரங்களைக் கொடுத்தார்.

பவுல் குறைந்தபட்சம் ஒன்பது ஆவிக்குரிய வரங்களைப் பட்டியலிடுகிறார்; தீர்க்கதரிசனம், அந்நிய பாஷை, அந்நியபாஷைக்கு வியாக்கியானம் கூறுதல், அறிவை உணர்த்தும் வசனம், ஞானத்தைப் போதிக்கும் வசனம், ஆவியைப் பகுத்தறிதல், குணமாக்குதலின் வரம், விசுவாசம், அற்புதங்களைச் செய்யும் வரம். இந்த வரங்கள் எல்லாம் ஒரே கூடுகையில் வெளிப்படுத்தப்பட்டன என்று அவர் சொல்லவில்லை. ஆனால் கூடுகைகளில் இவைகளின் செயல்பாட்டுக்கான சாத்தியக் கூறு காணப்பட்டது. 1 கொரிந்தியர் 14:26 வசனத்தில் ஆவியானவரின் செயல்பாட்டைக் குறித்து அவர் தொகுத்துக் கூறுகிறார்:

> நீங்கள் கூடிவந்திருக்கிறபோது, உங்களில் ஒருவன் சங்கீதம் பாடுகிறான், ஒருவன் போதகம் பண்ணுகிறான், ஒருவன் அந்நியபாஷையைப் பேசுகிறான், ஒருவன் இரகசியத்தை வெளிப்படுத்துகிறான், ஒருவன் வியாக்கியானம் பண்ணுகிறான். சகோதரரே, இது என்ன? சகலமும் பக்திவிருத்திக் கேதுவாகச் செய்யப் படக்கடவது.

இந்த ஐந்து பொதுவான வெளிப்பாடுகளைக் குறித்து நாம் பார்ப்போம். பின்வரும் ஒரு அத்தியாயத்தில் 1 கொரிந்தியர் 12:8–10





வசனங்களில் பட்டியிடப்பட்டிருக்கும் ஆவிக்குரிய வரங்களைக் குறித்து விரிவாகப் பார்ப்போம்.

இந்தப் பட்டியலில் முதலில் சங்கீதம் இருக்கிறது. பவுல் சபைகளுக்கு எழுதிய இரண்டு நிருபங்களில் ஆவியானவரால் கொடுக்கப்பட்ட சங்கீதங்களைக் குறித்துக் குறிப்பிடப்பட்டுள்ளது. கிறிஸ்தவ கூடுகைகளில் இவைகளின் இடத்தை இது உறுதிப்படுத்துகிறது.

> துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினால் நிறைந்து, சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி... (எபே. 5:18–19).

> கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி.... (கொலோ. 3:16).

சங்கீதங்கள், கீர்த்தனைகள், ஞானப்பாட்டுகள் இவைகளுக்கிடையேயுள்ள வேறுபாடு தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. ஆனால் இவையெல்லாமே கிறிஸ்துவின் வார்த்தைகளை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன, ஆவியானவரால் தூண்டப்பட்டிருக்கின்றன, விசுவாசிகள் ஒருவர் மற்றவருக்குப் போதிக்கவும், புத்திசொல்லவும் இவைகளைப் பாட வேண்டும். சபை வரலாற்றில் விசுவாசிகள் பாடிவரும் பல பாமாலைகளும் கோரஸ் பாடல்களும் இவைகளில் ஏதேனும் ஒரு பிரிவைச் சார்ந்ததாகவே இருக்கும். ஆனால் சமீபத்திய பல பாமைலைகளும், கோரஸ் பாடல்களும் வேதாகம அடிப்படையிலான ஆழத்தைப் பெற்றிருக்கவில்லை, எனவே இவை ஆவியானவரால் கொடுக்கப்படவில்லை என்பது சுட்டிக்காட்டப்படுகிறது. இவை விசுவாசிகளுக்குப் போதிக்கவும் புத்திசொல்லவும் மெய்யான மதிப்பைப் பெற்றிருக்கவில்லை. என்றாலும், வீட்டுச் சபைகளில் கூடிவரும் விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவர் நன்கு அறியப்பட்ட பழைய அல்லது புதுப் பாடல்களைப் பாடும்படி தனிப்பட்டவர்களுக்குத் தூண்டுதல் அளிப்பதை எதிர்பார்க்க முடியும். அல்லது அவர் சில உறுப்பினர்களுக்கு ஒரு புதுப்பாட்டைக் கொடுக்கலாம், உறுப்பினர்களின் பக்திவிருத்திக்காக இதைப் பயன்படுத்தலாம். சபைகள் தங்களுக்குச் சொந்தமான, ஆவியானவரால் கொடுக்கப்பட்டுள்ள பாடல்களைப் பெற்றிருப்பது எவ்வளவு சிறப்பான காரியம்!

## போதித்தல்

போதித்தல் அல்லது போதகம்பண்ணுதல் பவுலின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் இருக்கிறது. மறுபடியுமாக, ஆவியானவரால் தனக்குக் கொடுக்கப்பட்ட போதனையை எவரும் மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளலாம் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. ஆனால் ஒவ்வொரு போதனையும் அப்போஸ்தலரின் போதனைக்கு ஒத்ததாக இருக்கிறதா என்பது சீர்தூக்கிப் பார்க்கப்பட வேண்டும் [ஏனென்றால் எல்லோரும் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் – பார்க்க, அப். 2:42]. இன்று நாமும் இதைத்தான் செய்ய வேண்டும். ஆனால் இங்கேயோ அல்லது புதிய ஏற்பாட்டில் வேறு இடத்திலோ உள்ளூர் சபைகள் கூடிவந்தபோது, ஒரே நபரே தொடர்ந்து பிரசங்கம் செய்துவந்தார் என்று குறிப்பிடப்படவில்லை என்பதைக் கவனியுங்கள்.

எருசலேமில், ஆலயத்தில் அப்போஸ்தலர்கள் போதித்தபோது, அதிகமான பேர் கூடிவந்தார்கள். சபைகளில் போதிக்கும் பொறுப்பு மூப்பர்களுக்கும் கொடுக்கப்பட்டது என்றும், சிலர் போதிக்கும் ஊழியத்துக்கு அழைக்கப்படுகிறார்கள் என்றும் நாம் அறிவோம். பவுல் பொதுவாகவும், வீட்டுக்குவீடு சென்றும் அதிகமாகப் பிரசங்கித்தார் [பார்க்க, அப். 20:20]. என்றாலும், விசுவாசிகளின் சிறிய கூடுகைகளில் பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர், மூப்பர் அல்லது போதகர்களைத் தவிர மற்றவர்களையும் பயன்படுத்தலாம்.

போதிப்பதைப் பொருத்தவரையில் துவக்ககாலச் சபையைவிட நாம் பெரிய சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம் – நமக்குச் சொந்தமான வேதாகமத்தை நம்மால் உடன் எடுத்துவர முடிகிறது. ஆனால் இதே வேளையில் வேதாகமம் நமக்கு எளிதாகக் கிடைத்திருப்பது தேவனிடம் நமது முழு இருதயத்தோடும் அன்புகூருவதற்குப் பதிலாகவும், நம்மைப் போலப் பிறரையும் நேசிப்பதற்குப் பதிலாகவும், கோட்பாடுகளை உயர்த்திப் பேசும்படி செய்திருக்கிறது. இதன் மூலம் தேவனுடைய வார்த்தை கொடுக்கும் ஜீவனை நாம் இழந்து போயிருக்கிறோம். பல சிறு குழு வேதாகம ஆய்வுகள் ஞாயிறு காலைப் பிரசங்கங்களைப் போலவே பொருத்தமில்லாதவையாகவும், சோர்வளிப்பவையாகவும் இருக்கின்றன. வீட்டுச் சபைப் போதனைகளைப் பொருத்தவரையில் நாம் பின்பற்றக் கூடிய ஒரு நல்ல விதி இதுவாகும்: பெரிய பிள்ளைகள் தாங்கள் சோர்வடைந்திருப்பதை மறைத்து வைக்காமல் வெளிப்படுத்தினால், பெரியவர்கள் தங்கள் சோர்வை மறைத்துவைத்திருக்கலாம் என்பது தெளிவாகிறது. சிறுபிள்ளைகள் உண்மைக்குச் சிறந்த அளவுகோல்களாக இருக்கிறார்கள்.





## வெளிப்படுத்தல்

பவுல் அடுத்து வெளிப்படுத்துதலைப் பட்டியலிடுகிறார். இது தேவன் சரீரத்திலுள்ள எந்த உறுப்பினருக்கும் கொடுத்திருக்கும் வெளிப்படுத்தலைக் குறிக்கலாம். எடுத்துக்காட்டாக, அவிசுவாசி ஒருவன் ஒரு சபைக் கூடுகைக்கு வரும்போது, தீர்க்கதரிசன வரத்தின் மூலமாக ''அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாகும்'' என்று குறிப்பிட்டிருக்கிறார். இதன்மூலமாக அவன் ''முகங்குப்புற விழுந்து, தேவனைப் பணிந்துகொண்டு, தேவன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறாரென்று அறிக்கையிடுவான்'' [1 கொரி. 14:24–25].

இங்கே. சபைக் கூடுகைகளில் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தை எதிர்பார்க்க முடியும் என்பதை மறுபடியுமாகக் காண்கிறோம். அவருடைய பிரசன்னத்தின் காரணமாக இயல்புக்கு அப்பாற்பட்ட காரியங்கள் நடைபெறும். துவக்ககாலக் கிறிஸ்தவர்கள் ''இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்'' என்ற இயேசுவானவரின் வாக்குத்தத்தத்தை [மத். 18:20] அவர்கள் மெய்யாகவே விசுவாசித்தார்கள். இயேசுவானவர் தாமே அவர்கள் நடுவில் இருப்பாரானால் அற்புதங்கள் நிகழும். அவர்கள் மெய்யாகவே ''ஆவியினாலே தேவனுக்கு ஆராதனை செய்தார்கள்'' [பிலி. 3:3].

தீர்க்கதரிசனமானது மக்களின் இருதயங்களைக் குறித்த வெளிப்பாட்டைக் கொண்டிருக்கும். ஆனால் சொப்பனங்கள் மற்றும் தரிசனங்கள் மூலமாகவும், மற்றக் காரியங்களைக் குறித்தும் தீர்க்கதரிசனங்கள் கொடுக்கப்படலாம் [பார்க்க, அப். 2:17].

### அந்நிய பாஷைகளும் வியாக்கியானமும்

அடுத்து ஒன்றாகச் செயல்படும் இரண்டு வரங்களைக் குறித்துப் பவுல் குறிப்பிடுகிறார். இவையே அந்நிய பாஷைகளும், அந்நிய பாஷைகளுக்கு வியாக்கியானங்களுமாகும். கொரிந்திய சபையில் அந்நிய பாஷைகளை அளவுக்கு அதிகமாகவும், தவறாகவும் பயன்படுத்தினார்கள். அதாவது, மக்கள் சபைக் கூடுகைகளில் அந்நிய பாஷைகளைப் பேசினார்கள், அவைகளுக்கு வியாக்கியானம் கொடுக்கப்படவில்லை. எனவே சொல்லப்பட்டது என்ன என்பதை ஒருவரும் அறியவில்லை. இதற்கு எப்படிக் கொரிந்தியர்களைக் குற்றம் சாட்ட முடியும், அந்நிய பாஷைகளைக் கொடுத்த பரிசுத்த ஆவியானவர் அதற்கு வியாக்கியானத்தைக் கொடுக்கவில்லையே என்று நாம் சொல்லலாம். இந்தக் கேள்விக்குத் திருப்திகரமான ஒரு பதிலை நான் பின்வரும் ஒரு அத்தியாயத்தில் கொடுத்திருக்கிறேன். எப்படியிருப்பினும், பவுல் அந்நிய பாஷையில் பேசுவதை [பல அமைப்புச் சார்ந்த

சபைகள் தடுப்பதுபோல) தடுக்கவில்லை. மாறாக, ''அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள்'' என்றே அவர் சொல்லியிருக்கிறார் . இது கர்த்தருடைய கட்டளை என்றும் அவர் சொல்லுகிறார் (பார்க்க, 1 கொரி. 14:37–39).[19] இந்த வரத்தைச் சரியாகப் பயன்படுத்தும்போது, அது சரீரத்துக்குப் பக்திவிருத்தி உண்டாக்கும், தேவனுடைய இயல்புக்கு அப்பாற்பட்ட பிரசன்னம் அவர்கள் மத்தியில் இருப்பதை உறுதிப்படுத்தும். தேவன் மக்களின் மூலமாகப் பேசி, தமது சத்தியத்தையும், சித்தத்தையும் நினைவு படுத்துகிறார்.

வியாக்கியானம் கூறப்படாத அந்நிய பாஷையைவிட, தீர்க்கதரிசன வார்த்தையே மேலானது என்று பவுல் பதினான்காம் அதிகாரத்தில் குறிப்பிடுகிறார். தீர்க்கதரிசனத்தை விரும்பும்படி அவர் கொரிந்தியர்களை அதிகமாக ஊக்குவிக்கிறார். இதன்மூலம் ஆவியானவரின் வரங்கள் அவைகளை வாஞ்சிப்பவர்களின் மூலமாக வெளிப்படுத்தப்படுகின்றன என்பது தெரிகிறது. இதைப்போலவே பவுல் தெசலோனிக்கேய விசுவாசிகளுக்கும் எச்சரிப்புக் கொடுத்திருக்கிறார்: ''ஆவியை அவித்துப் போடாதிருங்கள். தீர்க்கதரிசிகளை அற்பமாயெண்ணாதிருங்கள்'' (1 தெச. 5:19). இதன்மூலம் தீர்க்கதரிசன வரத்தைக் குறித்து விசுவாசிகள் தவறான மனோபாவத்தைக் கொண்டிருப்பதின் மூலம் ஆவியை அவித்துப் போட முடியும் என்பது தெரிகிறது. இதுவே இன்று பெரும்பாலான விசுவாசிகளின் மத்தியில் தீர்க்கதரிசன வரத்தின் வெளிப்பாடு அபூர்வமாக இருப்பதற்குக் காரணமாகும்.

[19] முதல் நூற்றாண்டின் இறுதியிலேயே பரிசுத்த ஆவியானவரின் இயல்புக்கு அப்பாற்பட்ட வெளிப்பாடுகள் அனைத்தும் முடிவுக்கு வந்துவிட்டன என்று சொல்லுபவர்களும் இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன். இதனால் துவக்க காலச் சபை அனுபவித்ததை நாம் நாடக் கூடாது, அந்நிய பாஷையில் பேசுவது இனிமேலும் செல்லாது என்று அவர்கள் சொல்லுகிறார்கள். இவர்கள் நவீன காலச் சதுசேயர்களைப் போல இருக்கிறார்கள். நான் பல முறை ஜப்பானிய மொழியில் தேவனைத் துதித்திருக்கிறேன்; ஜப்பானிய மொழிப் பேச்சாளர்கள் அதை உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். நான் ஒருபோதும் ஜப்பானிய மொழியைக் கற்றதில்லை. பரிசுத்த ஆவியானவர் இந்த வரங்களைக் கொடுப்பதை நிறுத்தி விடவில்லை என்பதையும் நான் அறிவேன். பரிசுத்த ஆவியானவர் இன்றும் பாவிகளை அழைத்து, பாவத்தைக் குறித்து உணர்த்தி, அவர்களை மறுபடியும் பிறக்கச் செய்கிறார் என்பதை நம்பும் இந்த நவீன காலச் சதுசேயர்கள் ஏன் இந்த அற்புதங்களுக்கு அப்பாற்பட்டு அவருடைய கிரியையை மறுக்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை. இப்படிப்பட்ட ''இறையியல்'' மானிட அவநம்பிக்கை மற்றும் கீழ்ப்படியாமையின் விளைவாகும். இதற்கு வேதாகம ஆதாரம் கிடையாது. உண்மையில் இது இயேசுவின் சித்தத்துக்கு விரோதமானதாகும். பவுல் 1 கொரிந்தியர் 14:37 வசனத்தில் எழுதியிருப்பதின் அடிப்படையில் இது கிறிஸ்துவுக்கு நேரடியாகக் கீழ்ப்படியாமல் இருப்பதாகும்.





## எப்படித் துவங்குவது

வீட்டுச் சபையை ஸ்தாபிப்பவரின் ஊழியத்தின் மூலமாக வீட்டுச் சபைகள் பரிசுத்த ஆவியானவரால் பிறப்பிக்கப்படுகின்றன. அல்லது தேவனிடமிருந்து வீட்டுச் சபை குறித்த தரிசனத்தைப் பெற்றிருக்கும் மூப்பர்/போதகர்/கண்காணியால் வீட்டுச் சபை துவங்கப்பட்டிருக்கலாம். வேதாகமரீதியான மூப்பர்/போதகர்/கண்காணி என்பவர் அமைப்புச் சார்ந்த சபையினால் குறிப்பிடப்படும் முதிர்ச்சியடைந்த சாமானியருக்கு இணையாக இருக்கலாம். வீட்டுச் சபையை ஸ்தாபிக்கும் எவருக்கும் முறைசார்ந்த கல்வி அவசியமில்லை.

சபை ஸ்தாபிப்பவருக்குப் பரிசுத்த ஆவியானவர் வீட்டுச் சபை குறித்த தரிசனத்தைக் கொடுத்த பிறகு, தன்னோடு சேரக் கூடிய மற்றவர்களைக் காட்டும்படி அவர் ஆண்டவரிடம் வேண்டிக்கொள்ள வேண்டும். இதே தரிசனத்தைக் கொண்டிருக்கும் மக்களோடு அவருக்குத் தொடர்பு ஏற்படும்படி செய்து ஆண்டவர் தனது வழிநடத்துதலை உறுதிசெய்வார். அல்லது அவர் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளக் கூடிய அவிசுவாசிகளிடம் வழிநடத்தப்படலாம். அவர்களை அவர் கிறிஸ்துவுக்குள் வழிநடத்தி, பிறகு ஒரு வீட்டுச் சபையில் சீஷராக்கலாம்.

ஒரு வீட்டுச் சபையை இப்போதுதான் துவங்கியிருப்பவர்கள் உறுப்பினர்கள் ஒருவர் மற்றவரோடு சுமுகமாகப் பழகவும், பரிசுத்த ஆவியானவரோடு உறவுகொள்ளக் கற்றுக்கொள்ளுவதற்கும் சிறிது காலம் பிடிக்கும் என்பதை உணர வேண்டும். இது பிழைகளைச் சரி செய்துகொண்டு முன்னேறும் ஒரு ஊழியமாகவே இருக்கும். அமைப்புச் சார்ந்த சபையின் சூழலை மட்டுமே அறிந்தவர்களுக்கு, ஒவ்வொரு உறுப்பினரும் பங்கெடுக்கும் கருத்து, வேதாகமரீதியான சேவகத் தலைமைத்துவம், மூப்பர்களை ஆயத்தப்படுத்துதல், பரிசுத்த ஆவியான வரின் வழிநடத்துதலும், வரங்களும், பொதுவான உணவு, ஆவிக்குரிய சூழல் இவை அன்னியமாகவே இருக்கும். எனவே ஒரு புதிய வீட்டுச் சபையை உருவாக்கும்போது கிருபையோடும் பொறுமையோடும் செயல்படுவது அவசியமாகும். துவக்கத்தில் ஒரு வீட்டு வேதாகம ஆய்வின் வடிவமைப்பைப் பின்பற்றலாம். ஒருவர் ஆராதனையை வழிநடத்துகிறார், மற்றொருவர் ஆயத்தம்பண்ணப்பட்ட போதனையைப் பகிர்ந்துகொள்ளுகிறார், பிறகு கூட்டு ஜெபம், ஐக்கியம், உணவு இவைகளோடு கூட்டத்தை முடிக்கலாம். என்றாலும், வீட்டுச் சபை குறித்த வேதாகம வடிவமைப்பைக் குழுவினர் கற்றுக்கொண்ட பிறகு, மூப்பர்/போதகர் /கண்காணி உறுப்பினர்கள் தேவனுக்குப் பிரியமான வைகளைச் சிறப்பாகச் செய்யும்படி ஊக்குவிக்க வேண்டும். பிறகு சந்தோஷத்தோடு இந்த ஊழியத்தைத் தொடர வேண்டும்.

வீட்டுச் சபைகள் ஒவ்வொரு வாரமும் ஒரு உறுப்பினரின் வீட்டில் கூடிவரலாம். சில வீட்டுச் சபைகள் பருவநிலை சாதகமாக இருக்கும் போது இயற்கை அழகைக் கொண்ட வெளிப்புறத்தில் கூடி வருகின்றன. ஞாயிறு காலையில்தான் கூடிவர வேண்டும் என்பது அவசியமில்லை, உறுப்பினர்களுக்கு வசதியான ஒரு நேரத்தைத் தெரிந்துகொள்ளலாம். இறுதியாக, பன்னிருவருக்கு அதிகமான உறுப்பினர்கள் இல்லாமல் சிறிய அளவில் துவங்குவது சிறப்பாக இருக்கும்.

## அமைப்புரீதியான சபையிலிருந்து வீட்டுச் சபைக்கு மாறுவது எப்படி

இந்த நூலை வாசிக்கும் போதகர்களில் பெரும்பாலானோர் அமைப்புச்சார்ந்த சபையின் வடிவமைப்புக்குள்ளாகவே பணிசெய்து கொண்டிருப்பார்கள். அன்பான வாசகரே, நீங்களும் அவர்களில் ஒருவராக இருக்கலாம். நான் விவரிக்கும்படியான சபையை உருவாக்க வேண்டும் என்ற வாஞ்சையை நான் உங்களுக்குள் உருவாக்கியிருப்பேன் என்றால், எப்படி இந்த மாற்றத்தைக் கொண்டுவருவது என்று நீங்கள் சிந்தித்துக்கொண்டிருக்கலாம். இதற்காக நேரம் செலவழிக்கும்படி நான் உங்களை ஊக்குவிக்கிறேன். வேதாகமரீதியான சத்தியத்தை மட்டுமே போதிப்பதின் மூலம் துவங்குங்கள். இப்போது நீங்கள் பணிபுரியும் வடிவமைப்புக்குள்ளாக இயேசுவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் சீஷர்களை உருவாக்க உங்களால் முடிந்தவைகளைச் செய்யுங்கள். மெய்யான சீஷர்கள் வேதாகமரீதியான வீட்டுச்சபை வடிவமைப்பைப் புரிந்துகொள்ளும்போது, அதற்கு மாறும்படி வாஞ்சிப்பார்கள். வெள்ளாடுகளும், சமயவாதிகளும் இப்படிப்பட்ட மாற்றத்தை எதிர்த்து நிற்பார்கள்.

இரண்டாவதாக, இதைக்குறித்து வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதைப் படியுங்கள். வீட்டுச் சபை வடிவமைப்பைக் குறித்தும் அதனால் பெறக் கூடிய ஆசீர்வாதங்களைக் குறித்தும் உங்கள் சபையாருக்குப் போதியுங்கள். உங்கள் வாரநாள் அல்லது ஞாயிறு மாலை ஆராதனையை இரத்து செய்துவிட்டு, வீடுகளில் வாரம் ஒரு முறை கூட்டப்படும் ஸெல்கூட்டங்களைத் துவங்கலாம், முதிர்ச்சியடைந்த விசுவாசிகள் இந்தக் கூட்டங்களை வழிநடத்தலாம். எல்லோரும் கலந்துகொள்ளும்படி ஊக்குவியுங்கள். படிப்படியாக இந்தக் கூட்டங்கள் வேதாகமரீதியான வீட்டுச் சபைக் கூட்டங்களின் மாதிரியைப் பின்பற்றும்படி செய்யுங்கள். பிறகு மக்கள் தங்கள் சிறு குழுவின் ஆசீர்வாதங்களை முழுமையாக அனுபவிக்கத் துவக்குவதற்காகச் சிறிது காலம் காத்திருங்கள்.

எல்லோரும் இந்த வீட்டுக்கூட்டங்களை அனுபவிக்கத் துவங்கிய பிறகு, அடுத்த மாதத்தில் ஒரு குறிப்பிட்ட ஞாயிறு ‘‘துவக்க காலச்





சபை ஞாயிறாக’’ ஆசரிக்கப்படும் என்று நீங்கள் அறிவிக்கலாம். அந்த ஞாயிறன்று சபைக் கட்டிடம் மூடப்படும். எல்லோரும் துவக்ககாலச் சபையினர் செய்ததுபோல வீடுகளில் கூடிவந்து, ஒன்றாக உணவருந்துவது, கர்த்தருடைய இராப்போஜனம், ஐக்கியம், ஜெபம், ஆராதனை, பகிர்ந்துகொள்ளப்படும் போதனை, ஆவிக்குரிய வரங்கள் இவைகளை அனுபவிக்கலாம். இது வெற்றிகரமாக நடக்குமானால், மாதத்தில் ஒரு ஞாயிறு இப்படிக் கூடிவரும்படி ஒழுங்கு செய்யலாம். பிறகு இரண்டு ஞாயிறுகள், மூன்று ஞாயிறுகள் என்று அதிகரிக்கலாம். இறுதியில் ஒவ்வொரு குழுவும் ஒரு தனிப்பட்ட வீட்டுச் சபையாக இருக்கும்படி நீங்கள் அவர்களை விடுவிக்கலாம். அவைகள் வளர்ந்து பெருகும் சுயாதீனத்தைக் கொடுக்கலாம். இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை எல்லோரும் கூட்டுக் கூட்டத்தில் பங்கெடுக்கலாம்.

நான் விவரித்துள்ள இந்த மாற்றத்தின் வழிமறையைச் செயல்படுத்த ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகள் ஆகலாம்.

அல்லது இன்னும் கவனமாகச் செயல்படும்படி நீங்கள் விரும்புவீர்களானால், இதில் அதிகமான ஆர்வத்தைக் கொண்டிருக்கும் உறுப்பினர்களைக் கொண்டு ஒரு வீட்டுக் கூடுகையை நீங்களே வழிநடத்தலாம். [வீட்டுச் சபைகள் ஞாயிறு காலையில்தான் கூட வேண்டும் என்ற அவசியமில்லை]. இதை ஒரு பரிசோதனையாக நடத்தலாம், அது எல்லோருக்கும் கற்றுக்கொள்ளுவதற்கான வாய்ப்பைக் கொடுக்கும்.

இது வெற்றிபெறுமானால், ஒரு கண்காணியை நியமித்து, இந்தக் குழு ஒரு தனிப்பட்ட சபையாக இயங்கும்படி அதை விடுவியுங்கள். மாதம் ஒரு முறை மட்டுமே இவர்கள் அமைப்புச் சார்ந்த சபையின் ஞாயிறு காலை ஆராதனையில் பங்குகொள்ளுவார்கள். இந்த வகையில் புதிய சபை இன்னும் தாய்ச்சபையின் ஒரு பகுதியாகவே இருக்கும். இன்னும் அமைப்புரீதியான சபைக்குள்ளாக இருப்பவர்கள் அதை ஒரு எதிர்மறையான காரியமாகக் கருத மாட்டார்கள். இது சபைக்குள்ளே இருப்பவர்களில் தாக்கம் விளைவித்து, அமைப்புச் சபையின் சார்பாக மற்றொரு வீட்டுச் சபை துவங்கப்படுதற்கு வழிநடத்தும்.

முதல் குழு வளர்ச்சியடையும்போது, அதை இரண்டாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவையும் வழிநடத்த நல்ல தலைவர்கள் இருக்கிறார்களா, உறுப்பினர்களுக்கிடையே போதிய ஆவிக்குரிய வரங்கள் காணப்படுகின்றனவா என்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள். சில குறிப்பிட்ட வேளைகளில் இரு குழுவினரும் சேர்ந்து ஒன்றாகக் கூடலாம். மாதம் ஒரு முறையோ அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ இப்படிக் கூடிவரலாம்.

நீங்கள் செல்லும் வழியில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேர்ந்தாலும் இலக்கிலேயே பார்வையை வைத்திருங்கள். வீட்டுச் சபைகள்

மக்களைக் கொண்டவை, மக்கள் பிரச்சினைகளை உண்டாக்கக் கூடியவர்கள். தளர்ந்துபோய் விட்டுவிடாதிருங்கள்.

உங்களுடைய அமைப்புச் சார்ந்த சபையிலிருக்கும் எல்லோரும் இந்த மாற்றத்துக்கு முன்வருவார்கள் என்று சொல்ல முடியாது. எனவே, எந்த இடத்தில் அமைப்புச் சார்ந்த சபையை விட்டுவிட்டு, ஒரு வீட்டுச் சபைக்கோ அல்லது வீட்டுச் சபைகளின் தொகுப்புக்கோ முழுவதுமாக உங்களை ஒப்புக்கொடுப்பது என்பதை நீங்கள்தான் தீர்மானிக்க வேண்டும். இது உங்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நாளாக இருக்கும்!

**மிகச் சிறந்த சபை**

பெரிய கட்டிடத்தைக் கொண்டிருந்து, ஞாயிற்றுகிழமைகளில் ஆயிரக்கணக்கான மக்கள் வருகைதரும் பெரிய சபையைவிட, தேவனுடைய பார்வையில், ஒரு வீட்டுச்சபையின் போதகர் அதிக வெற்றிகரமானவராகத் தோன்றுவாரா? ஆமாம், அவர் வாரம் ஒருமுறை ஒரு இசை நிகழ்ச்சியைப் பார்க்கவும், பின்னணியைவிட்டு வெளியே எடுக்கப்பட்ட வசனங்களைக் கொண்டிருக்கும் வேடிக்கையான பேச்சைக் கேட்கவும் வெள்ளாடுகளைக் கூட்டிச் சேர்ப்பதற்கு மாறாக, அந்தப் போதகர் இயேசுவின் மாதிரியைப் பின்பற்றி, சீஷர்களையும், சீஷராக்குபவர்களையும் பெருக்கமடையச் செய்வாரானால், தேவன் கண்டிப்பாக அவர் வெற்றிகரமானவர் என்று எடுத்துக்கொள்ளுவார்.

வீட்டுச் சபை மாதிரியைப் பின்பற்றும்படி தீர்மானிக்கும் ஒரு போதகர் ஒருபோதும் தனக்கென பெரிய சபையைக் கொண்டிருக்க மாட்டார். என்றாலும், காலம் கடக்கும்போது, அவருடைய சீஷர்கள் சீஷர்களை உருவாக்கும்போது, அவர் அதிகமான நிலைத்திருக்கும் கனிகளைப் பெறுவார். 40 முதல் 50 பேரைக் கொண்ட ''சிறிய'' சபைகளின் போதகர்கள் இன்னுமதிகமான நபர்களைச் சேர்க்கவேண்டும் என்று முயலுவார்களானால், அவர்கள் தங்கள் சிந்தனைகளைச் சரி செய்துகொள்ள வேண்டும். அவர்களுடைய சபைகள் ஏற்கெனவே அளவுக்கு மீறிப் பெரியவைகளாக இருக்கலாம். அவர்கள் பெரிய கட்டிடத்துக்காக ஜெபிப்பதை நிறுத்திவிட்டு, இரண்டு புதிய வீட்டுச் சபைகளை வழிநடத்துவது யார் என்பதைக் குறித்து ஜெபிக்க வேண்டும். [தயவு செய்து அப்படிப்பட்ட நிலை வரும்போது, உங்கள் புதிய சபைப் பிரிவுக்கு ஒரு பெயரையும், உங்களுக்கு ''பேராயர்'' பட்டத்தையும் கொடுக்காதீர்கள்!]

சபையைப் பொருத்தவரையில் பெரியதே சிறந்தது என்ற சிந்தனையை நாம் விட்டுவிட வேண்டும். வேதாகம அடிப்படையில் மட்டும் நாம் சீர்தூக்கிப் பார்ப்போமானால், சீஷராகாமல், சிறப்பான கட்டிடங்களில் கூடிவரும் நூற்றுக்கணக்கான பார்வையாளர்கள்





விநோதமானவர்களாகவே கருதப்படுவார்கள். துவக்ககால அப்போஸ் தலர்களில் எவராவது தற்போதைய அமைப்புச் சார்ந்த சபைக்கு வருவாரானால், அவர் திக்குமுக்காடிப் போவார்!

**ஒரு இறுதியான எதிர்ப்பு**

கிறிஸ்தவ சமயம் ஏற்கெனவே கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக ஆகிவிட்டிருக்கும் மேற்கத்திய உலகத்தில் வீடுகளில் சபை கூடிவருவதை ஒருபோதும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள் என்று சொல்லப் படுவதுண்டு. எனவேதான் நாம் அமைப்புச்சார்ந்த சபை மாதிரியையே பின்பற்ற வேண்டும் என்று வாதிடுகிறார்கள்.

முதலாவதாக, இது உண்மையல்ல என்பது நிரூபணமாகிக் கொண்டுவருகிறது. மேற்கத்திய உலகத்தில் வீட்டுச் சபை இயக்கங்கள் துரிதமான வளர்ச்சியைப் பெற்று வருகின்றன.

இரண்டாவதாக, மக்கள் ஏற்கெனவே விருந்துகளுக்காகவும், ஐக்கியத்துக்காகவும், வேதாகம ஆய்வுக்காகவும், வீட்டு செல் குழுக் களுக்காகவும் கூடிவருகிறார்கள். வீடுகளில் கூடிவரும் சபை என்பதைக் குறித்த கருத்துக்குச் சிந்தனையில் அதிக மாற்றம் தேவையில்லை.

மூன்றாவதாக, சமயவாதிகள் அல்லது ''ஆவிக்குரிய வெள்ளாடு கள்'' ஒருபோதும் வீட்டுச் சபை குறித்த கருத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது உண்மைதான். தங்கள் அயலாருக்குத் தாங்கள் வித்தியாசமானவர்கள் என்று சுட்டிக்காட்டும் ஒன்றை அவர்கள் ஒருபோதும் செய்ய மாட்டார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவின் மெய்யான சீஷர்களுக்கு வீட்டுச் சபைகளின் வேதாகம அடிப்படையை நாம் சுட்டிக்காட்டுவோமானால், அவர்கள் அதை ஏற்றுக்கொள்ளுவார் கள். சீஷராக்குவதற்குச் சபைக் கட்டிடங்கள் எப்படித் தேவையில்லாத வையாக இருக்கின்றன என்பதை அவர்கள் உடனே உணர்ந்து கொள்ளுகிறார்கள். நீங்கள் ''மரம், வைக்கோல், புல்'' இவைகளைக் கொண்டு பெரிய சபையைக் கட்ட விரும்புவீர்களானால் [பார்க்க, 1 கொரி. 3:12], உங்களுக்கு ஒரு கட்டிடம் தேவைப்படுகிறது. ஆனால் இறுதியில் எல்லாம் எரிந்துபோகும். ஆனால் நீங்கள் சீஷர்களையும் சீஷர்களாக்குபவர்களையும் பெருக்கமடையச் செய்ய விரும்புவீர் களானால், ''பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல்'' இவைகளைக் கொண்டு இயேசுகிறிஸ்துவின் சபையைக் கட்ட விரும்புவீர்களானால், நீங்கள் கட்டிடங்களில் உங்கள் பணத்தையும்,பலத்தையும் செலவழிக்க வேண்டியதில்லை.

இன்று உலகத்தில் செயல்பட்டுவரும் மிகப் பெரிய சுதேசி சுவிசேஷ இயக்கமாகிய சீன வீட்டுச் சபைகளின் ''எருசலேமுக்குத் திரும்புவோம்'' இயக்கமானது 10/40 சன்னல் நாடுகளில் சுவிசேஷ ஊழியத்துக்காக ஒரு

திட்டவட்டமான செயல்தந்திரத்தைப் பின்பற்றிவருகிறது. ‘‘எங்கேயும் ஒரு சிறிய சபைக் கட்டிடத்தைக் கூடக் கட்டுவதற்கு நாங்கள் விரும்ப வில்லை. இது சுவிசேஷம் மிக வேகமாகப் பரவுவதற்கு வழிவகுக்கிறது, அதிகாரத்திலுள்ளவர்கள் எங்களைக் கண்டுபிடிப்பதும் கடினமாக இருக் கிறது, எங்கள் ஆதாரங்கள் முழுவதையும் நேரடியாகச் சுவிசேஷ ஊழியத்துக்காகச் செலவிடும்படி இது எங்களைப் பலப்படுத்துகிறது’’ என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.



# 5

# சபை வளர்ச்சி

நீங்கள் ஒரு போதகர், உங்கள் சபை வளர்ச்சிபெற வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள். இது போதகர்களின் நடுவே பொதுவாகக் காணப்படும் வாஞ்சையாக இருக்கிறது. ஆனால் ஏன் உங்கள் சபை வளர்ச்சிபெற வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள்? *உங்கள் இருதயத்திலுள்ள நேர்மையான காரணம் எது?*

நீங்கள் வெற்றிபெற்றவர் என்பதுபோல உணர வேண்டும் என்பதற்காக உங்கள் சபை வளர வேண்டுமென்று விரும்புகிறீர்களா? நீங்கள் மதிக்கப்படும் ஒருவராகவும், செல்வாக்குள்ள ஒருவராகவும் இருக்க விரும்புகிறீர்களா? மக்கள்மீது அதிகாரத்தைக் காட்ட நீங்கள் விரும்புகிறீர்களா? நீங்கள் செல்வத்தைப் பெறும்படி நம்பிக்கை வைத்திருக்கிறீர்களா? உங்கள் சபை வளர வேண்டும் என்று விரும்பு வதற்கு இவையெல்லாம் தவறான காரணங்களாகும்.

இன்னுமதிகமான மக்கள் பரிசுத்த ஆவியானவரால் மாற்றப்படு வதின்மூலம் தேவன் மகிமைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காக உங்கள் சபை வளர வேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்களானால், இது சபை வளர்ச்சியை விரும்புவதற்கான சரியான காரணமாகும்.

நமது செயல்நோக்கங்கள் சுயநலமாக இருக்கும் வேளையில், அவை தூய்மையானவை என்று நினைத்து நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள முடியும்.

நமது மெய்யான செயல்நோக்கங்களை நாம் எப்படி அறிய முடியும்? நாம் மெய்யாகவே *தேவனுடைய* ராஜ்யத்தைக் கட்ட விரும்பு கிறோமா அல்லது நம்முடைய *சொந்த* ராஜ்யத்தைக் கட்ட விரும்பு கிறோமா என்பதை அறிவது எப்படி?

மற்றப் போதகர்களின் வெற்றியைக் குறித்து நாம் உள்ளுக்குள் எத்தகைய எண்ணம் கொண்டிருக்கிறோம் என்பதை அளந்து பார்ப்பது ஒரு வழியாகும். நமது செயல்நோக்கங்கள் தூய்மையானவை என்று நாம்